வாரப் பதிப்பு விலை சதம் 25

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.




புத்தகம் 17 | திருவள்ளுவர் ஆண்டு 1994 பங்குனி திங்கள் 23-ம் நாள் (5—4—1964) ஞாயிற்றுக்கிழமை துல்கஃ 21 | இதழ் 45

# அரிசி மானிய வெட்டு வருமா?

## பட்ஜட்டுக்கு இ. ஐ. மு. ஆதரவு பெற முயற்சி

## கூட்டாட்சி ஏற்பட்டால் ஆளும் கட்சி பிளவுபடும்

(சுதந்திரன் அரசியல் நிருபர்)

அரிசிப் பங்கிடு மானியத்தை வெட்டிக் குறைத்தாலன்றி அடுத்த வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரிக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருப்பதாகவும், வரவு-செலவுத் திட்டத்தை நிறைவேற்றிக் கொள்ளவே இடதுசாரிகளின் ஆதரவை அரசாங்கம் நாடுகிறதென்றும் அரசியல் வட்டாரங்களில் பேச்சு அடிபடுகிறது.

இடதுசாரிகளுடன் சேர்ந்து கூட்டு அரசாங்கம் அமைக்கப்பட்டால் ஆளும் கட்சியிலும், இடதுசாரிக் கட்சிகளிலும் பிளவு ஏற்படுவது தவிர்க்க முடியாதென்றும், இதன் விளைவாகக் கூட்டு அரசாங்கத்திலும் நெருக்கடிகள் தோன்றலாமென்றும், சிற்சில உபாயங்களைக் கொண்டு வரவு-செலவுத் திட்டத்தை நிறைவேற்றிக்கொள்வதோடு நெருக்கடிகள் தீர்ந்துவிடாதென்றும் அரசியல் வட்டாரங்களில் சுட்டிக்காட்டப்படுகிறது.

அடுத்த வரவு செலவுத் திட்டமே இன்று நாட்டின் முன்னுள்ள முக்கிய பிரச்சினை.

ஏழை மக்களுக்கு நிவாரணமளிக்கும் சமூக சேவா உதவிகளையும், பங்கீட்டு அரிசி மானியத்தையும் கணிசமான அளவு குறைத்தாலன்றி அடுத்த வரவு செலவுத் திட்டத்தை அநேகமாகத் தயாரிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

சென்ற ஆண்டுக்கு முந்திய ஆண்டிலும் இதனைச் செய்ய அரசாங்கம் முயற்சி செய்தது. ஆனால் அரசாங்க எம். பிகள் "புரட்சி" செய்ததால் அரிசிப் பங்கீட்டு மானியத்தை வெட்டும் முயற்சி கைவிடப்பட்டது.

இன்று பாராளுமன்றத்தில் அரசாங்கத்தின் பெரும்பான்மை பலம் குறைந்துவிட்டது. தற்போதுள்ள அரசாங்க எம். பிகள்

(7-ம் பக்கம் பார்க்க)

## 6 மந்திரி பதவி பெற இடதுசாரிகள் முயற்சி?

இடதுசாரி ஐக்கிய முன்னணியின் முதல்வரிசைத் தலைவர்களான பாராளுமன்ற உறுப்பினர்கள் எப்படியும் இன்றைய அரசாங்கத்தில் மந்திரிப் பதவி பெற்றே தீருவது என்று முடிவு செய்துவிட்டார்கள் என்று கூறப்படுகிறது


ஆறு மந்திரி பதவிகள் தங்களுக்குக் கொடுக்கப்பட வேண்டுமென அவர்கள் கேட்டிருப்பதாகவும் பேச்சு அடிபடுகிறது.

குறிப்பாக நிதிமந்திரி பதவி டாக்டர் என். எம். பெரேராவுக்கும், உணவு, விவசாய மந்திரிப் பதவி திரு. பிலிப் குணவர்த்தனவுக்கும்வழங்கப்படவேண்டுமென்பது அவர்களின் கோரிக்கைகளில் ஒன்றும்.

தாங்கள் அரசாங்கத்தில் சேர்ந்தால் மைத்திரி பால சேனநாயக்கா, திரு. சி. பி. டி. சில்வா, மகாநாம சமரவீர போன்ற மந்திரிகள் வெளியேறி விடுவார்களென்று இடதுசாரித் தலைவர்கள் எதிர்பார்க்கிறார்களென்று கூறப்படுகிறது.

ஆளும் கட்சியிலிருந்து வெளியேறுபவர்களின் தொகை: வந்து சேரவிருக்கும் இடதுசாரி முன்னணி உறுப்பினர் தொகையிலும் குறைவாக இருக்கும் அறிகுறிகள் தென்பட்டால் பிரதமர் இடதுசாரியினரின் ஆதரவை துச்சமானதாக மதிக்கமாட்டார் என்று அரசியல் வட்டாரங்கள் அபிப்பிராயப்படுகின்றன. இத்

(6-ம் பக்கம் பார்க்க)


CAUTION:

CENTRAL BANK OF CEYLON
E.P.F. Dept., P. O. Box 1299, Colombo

இலங்கை மத்திய வங்கி
ஊழியர் சேமநிதி இலாகா
தபால் பெட்டி இல. 1299, கொழும்பு

சாம்பற் தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு ஊழியர் சேமலாப நிதிப்பகுதியினரால் அனுப்பிவைக்கப்பட்டிருந்த பற்றுச் சீட்டு ஒன்று மேற் கண்ட கோலத்துடன் சங்க நிர்வாகிகளை அடைந்திருக்கிறது. "கோப்பரட்டி கள்ளன், எத்தினபேர் இருக்கிறர்கள், எவ்வளவு காசு களவெடுத்தீர்கள், செருப்படி கிடைத்ததா?" ஆகிய வாக்கியங்கள் இப்பற்றுச் சீட்டில் இடம் பெற்றிருந்தன என்று தெரிய வருகிறது. இத்தகைய கீழ்த்தர நடவடிக்கைகளைச் செய்துள்ளவர்கள் யார் என்பது இது வரை தெரியவில்லை. இது பற்றி விசாரணை நடத்துமாறு ப. நோ. கூ. சங்கம் மத்திய வங்கி ஊழியர் சேம நிதி இலாகாவை கேட்டுக் கொண்டிருப்பதாக அறியப்படுகிறது.

## சீனச் சார்பு கோஷ்டியிலும் ஒரு பிளவு

இலங்கைக் கொம்யூனிஸ்டுகளிற் சீனச் சார்புள்ள கோஷ்டியில் பிளவு ஏற்பட்டிருப்பதாகவதந்தி அடிபடுகிறது.

இதற்குக் காரணம் பம்பாயிலிருந்து வெளியாகும் ஆங்கில வாரப் பத்திரிகையொன்று வெளியிட்டிருந்த செய்திதான்.

சீனச் சார்புக் கோஷ்டியில் பிரபலஸ்தரான ஓர் அம்மையார் திரு. சண்முகதாசனைப் பற்றி சில தகவல்களைப் பீகிங்குக்கு அனுப்பியதாகவும் அதனைநம்பியபீகிங்மேலிடம் சீனச் சார்புக் கோஷ்டியினர் புதிதாகத் தொடங்கியுள்ள போட்டிக் கொம்யூனிஸ்டுக் கட்சிக்குத் திரு. பிரேமலால் குமாரசிரியைப் பொதுக் காரியதரிசியாக நியமிக்கும்படி இலங்கைக்கு உத்தரவு அனுப்பியதாகவும் பிரஸ்தாப பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இக் கோஷ்டியும் இரு துண்டுகளாக உடைந்து விழும் நாள் வெகு தூரத்திலில்லை என்று அரசியல் அவதானிகள் கருத்து தெரிவிக்கின்றனர்.

## சிங்கள ஊழியர் தமிழ் கற்க வேண்டும்

சிங்கள அரசாங்க ஊழியர்கள் தமிழ் கற்க வேண்டும் என்று பௌத்த ஜாதிக பலவேகயா கோரிக்கைவிடுத்திருப்பதாகத் தெரிகிறது. உண்மையான பரந்த நோக்கத்தின் அடிப்படையிலோ, தமிழ் மொழிக்கு சம அந்தஸ்து வழங்கும் நோக்குடனோ இக் கோரிக்கை விடுக்கப்படவில்லை.

தமிழ் பிரதேசங்களில் கடமை பார்க்கச் செல்லுகின்ற சிங்கள ஊழியர்கள் தமிழ் பேசும் மக்களுடன் ஒன்றி,கடமை பார்க்க தமிழ் கற்றிருப்பது வசதியளிக்கும், அல்லாவிட்டால் தமிழ் பேசும் மக்களுக்கான கடமைகளைக் கவனிப்பதற்காக பிரத்தியேகமாகத் தமிழ் ஊழியர்கள் நியமிப்

(7-ம் பக்கம் பார்க்க)

## புத்தாண்டு இதழில் ஆரம்பமாகும் புது விருந்துகள்

ஈழத்தின் தலை சிறந்த எழுத்தாளர்களின் கருத்துப் புதையல்—

* 'எப்படி எழுத ஆரம்பித்தேன்'

தமிழகத்துக்குச் சென்று திரும்பிய எழுத்தாளர் 'நவம்' எழுதும் நகைச்சுவை பொதிந்த—

* குமரி முதல் சென்னை வரை

வழக்கமான அம்சங்களுடன் 12-4-64 இதழிலிருந்து இவ்விரு அம்சங்களும் தொடர விருக்கின்றன.

உங்கள் பிரதிக்கு விற்பனையாளர்களிடம் பதிவு செய்து கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கள்ளிப் புதர்க் காட்டில் கலைப்பயிர்

## வளர்த்த கார்முகில் அழகப்ப வள்ளல்

வறண்ட கட்டாந்தரைப் பிரதேசமான ராமநாதபுர வட்டாரம், அதிலே முள்ளும், கள்ளிப்புதர்களும் மண்டிக்கிடந்த ஒரு இடம், காரைக்குடி என்பது அதன் பெயர். அந்தப் பிரதேசத்திலே ஒரு கார்முகில் உதித்தது—காற்றோடு கலந்து வானிலே மிதந்து எங்கெங்கோ பறந்து செல்லும் பிற முகில்களைப்போல் அல்லாது அந்த முகிலானது காரைக்குடியிலேயே கருணை மழை பொழியத் தொடங்கியது. அந்த மழை வயிற்றிற்கு உணவாகும் நெற்பயிரைவளர்க்கவில்லை—அறிவிற்கு விருந்தாகும் கலை என்னும் பயிர் வளரக் காரணமாக அமைந்தது. அந்தக் கார்முகில்தான் ஈத்துவக்கும் பண்பைப்பேணிய டாக்டர் அழகப்பச் செட்டியாராகும்.

### ஊருண் கேணி

அறிஞர் அழகப்பர், கல்வி வளர்ச்சிக்கும், கலை வளர்ச்சிக்கும் இல்லையெனுது வாரி வழங்கினர். இதன் பயனுக என்றும் அழகப்பன் புகழ்பாடும் கலைக்கூடங்கள் பல காரைக்குடியில் உருவாகின. 'பழுமரம் தேடிச் செல்லும் பறவைபோல்' பாரத நாட்டின் பல பாகங்களிலிருந்தும், கடல் கடந்து மலாயா, இலங்கையாம் நமது நாடு, ஆப்பிரிக்கா போன்ற தேசங்களிலிருந்து அறிவென்னும் விருந்துணை ஆயிரமாயிரம் மாணவர்கள் காரைக்குடியை நாடினர். நாடுகின்றனர். காரைக்குடியின் கலைக் கூடங்களும், தம்மை ஆக்கிய அழகப்பரைப்போல் 'ஊருண் கேணியாய்' வந்தாரை எல்லாம் கல்விவளம் உடையராக்கும் பெரும் பணியைத் தளராது ஆற்றி வருகின்றன.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

சற்சொருபவதி நாதன்
பி. எஸ். சி.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

தமிழ் நாட்டின் சரித்திரத்திலே 1947-ம் ஆண்டு அதிர்ஷ்டம் வாய்ந்த ஆண்டாக அமைந்துவிட்டது. காரணம் அந்த ஆண்டில் தான் அழகப்பர் கலைக் கல்லூரி ஆரம்பமாகியது.

### மொழி வளர்ச்சிக்கு...

வள்ளலாரின் கொடைத் தன்மையின் சிறப்பால் உருவாகிய கலைக்கல்லூரி இன்று ஆயிரத்தைந்நூறு மாணவர்களுக்கு மேலாகக் கல்வி பயிலும் கலைக் கூடமாகப் புதுமுக வகுப்பிலிருந்து பி. ஏ, பி. எஸ்ஸி, பி. காம் முதலிய வகுப்புக்களுடன் ராமநாதபுர மாவட்டத்திலேயே முதல்தரக் கல்லூரியாகத் திகழும்பெருமையைக் காண்கின்றோம். 'பூதத்துவப்'பிரிவு சென்னை மாகாணத்தில் மாநிலக் கல்லூரியிலும், அழகப்பர் கல்லூரியிலுமே ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. தான் பிறந்த ஊருக்குப் பெருமை தந்த வள்ளல், தனது மொழியாம் தமிழ் மொழிக்குக் கல்லூரியில் பிரதானம் அளித்தும் புகழடைந்துள்ளார். மொழிக்குச் சிறப்பளித்த பாங்கினைக் காண எமக்குப் பெருமிதம் ஏற்படத்தான்செய்கின்றது. பட்டதாரி தொடர் மேற்படிப்பு(Post Graduate Course) வகுப்புகள் தமிழில் நடைபெறும் கல்லூரி அழகப்பர் கல்லூரியாகும்—அந்நிய மொழியைத் தாய்மொழியாக உடைய மாணவர், தமிழ் கற்க, தமிழ்மொழியின் சிறப்பை உணர்ந்து அம்மொழி ஆராய்ச்சியில் ஈடுபட அழகப்பர் கலைக்கல்லூரியை நாடுகின்றனர் எனின் அக் கல்லூரியின் தமிழ்க் கல்வியின் தரத்தை எளிதில் ஊகித்துக்கொள்ளலாம்.

> அறிஞர் கலாநிதி அழகப்பச் செட்டியார் கல்வி வளர்ச்சிக்கும் கலைவளர்ச்சிக்கும் இல்லை யெனுது வாரி வழங்கிய வள்ளல். காடாகக் கிடந்த காரைக் குடியில் நல்ல தொரு கலைக் கூடம் கட்டி தமிழ் நாட்டின் புகழை நானிலத்தின் நாலா பகுதிகளுக்கும் ஒளி வீசச் செய்த செம்மல். இக் கலைக் கூடத்தில் உலகின பல பகுதியையும் சேர்ந்த மாணவர்கள் பயின்றிருக்கிறார்கள், இன்னும் பயின்று வருகிறார்கள். ஈழத் தமிழ் மாணவ மாணவிகளில் பெரும் பாலோரும் ஒரு சில சிங்கள மாணவர்களும் இக் கலைக் கூடத்தில் கற்று, அறிவியல், கலையியல் மற்றும் துறைகளில் பட்டம் பெற்று விளங்குகிறார்கள். ஆனால் ஆட்சியாளரின் இன்றைய கெடுபிடிச் சட்டத்தினால் இலங்கை மாணவர்கள் இவ்வரிய அறச்சாலையில் கல்வி வசதி பெறும் வாய்ப்பை இழந்து விட்டார்கள். இக் கட்டுரை ஆசிரியையும் இக் கலைக் கூடத்தில் கற்றுப்பட்டம் பெற்ற வராவர்.

### தொழில் வளர்ச்சிக்கு...

மூளைக்கு வேலை கொடுத்தால் மட்டும் போதாது. 'சுவரின்றிச் சித்திர மெழுத முடியாது' என்பதனை உணர்ந்த வள்ளலார் உடற்பயிற்சி கற்பதற்கும் ஒரு கல்லூரி ஏற்படுத்தி இருக்கின்றார். 1952-ல் டாக்டர் லட்சுமண முதலியாரால்திறந்து வைக்கப்பட்ட 'பவநகர் மைதானம்' ஒலிம்பிக் மைதானமோ என எண்ணுமளவிற்குச் சிறப்பாக, விசாலமாக அமைந்து ராமநாதபுர மாவட்டக் கல்லூரிகள் எல்லாம் போட்டிப் பந்தயங்களில் ஈடுபடுவதற்கு இடமளிக்கும் சிறந்த மைதானமாகவும் அமைந்துவிட்டது இன்றும், வளரும் பாரதத்திற்கு இன்றியமையாத யந்திரத் தொழில் வளர்ச்சிக்கும் அழகப்பர் முக்கியத்துவம் கொடுக்க மறந்துவிடவில்லை. பொறியியல்கல்லூரி ஒன்றும், அதனுடன் சம்பந்தப்பட்ட தொழில் நுட்பக் (Poly Technic) கல்லூரியும் சிறந்த தொண்டாற்றுகின்றன.

அழகப்பர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி ஒன்றையும் நிறுவியுள்ளார். வருடா வருடம் ஆசிரியர்களை உருவாக்கும் பெரும் பணியை இக் கல்லூரி ஆற்றி வருகின்றது.

### சமுதாய வளர்ச்சிக்கு...

எவர்க்கும் எளியராக வாழ்ந்த ஏந்தல் அழகப்பருக்கு இதமானவை எழில் மிகுந்த பூக்கள். இதயங் கவரும் குழந்தைகள் என்று அவருடன் பழகியவர் அறிவர். குழந்தைகளைக் கண்டால் எத்தகைய துயரையும் மறந்துவிடும் வள்ளலார், [illegible] (Montessori) பள்ளியையும் [illegible] ஏற்படுத்தியதில் அதிசயமில்லை. மண்டிசோரியம்மையாரின் கொள்கைக் கிணங்க சிறு குழந்தைகளை, அவரவர் மனப்போக்கிற்கேற்ப, அன்பும் பரிவும் காட்டி வளர்த்தால் சிறந்த சமுதாயம் உருவாகும் என்பதை உணர்ந்து கல்வி புகட்டும் வகையில் அழகப்பர் இப் பள்ளியை அமைத்துத் தந்திருக்கின்றார்.

(11-ம் பக்கம் பார்க்க)


## உங்கள் வியாதி எதுவானாலும் தீர்த்துத் தருகிறோம்



நரம்பு பெலவீனம், பெலக்குறைவு, குண்டிக்காய், மூத்திரப்பை கோளாறுகள், அசுத்த இரத்தத்தால் ஏற்படும் பண்புறைகள், பற்றுகள், க்ஷயரோகம், இளைப்பு, இருமல், வலிப்பு, தீராத வயிற்று வலி, வாதம், வயிற்றுக் கோளாறுகள், பித்த காமாலை, சோகை, பாண்டு, அண்டவாய்வு, இரத்த மூலம், சீழ்மூலம், வெளி மூலம், பெண்களுக்கு ஏற்படும் சூதகக் கோளாறுகள், கெர்ப்பக் கோளாறுகள் இன்னும் பல டாக்டர்களால் கைவிடப்பட்ட நாட்பட்ட வியாதிகளினின்று பூரண குணமடைவதற்கு உடனே காலதாமதமின்றி புகழ்வாய்ந்த ஆயுர்வேத டாக்டர் T. H. மதுரநாயகம் வைத்தியராஜ் MD. MS. (H) Cal. அவர்களைக் கலந்தாலோசியுங்கள்.

63 வருட பரம்பரை வைத்திய நிபுணர்.

**ஞானசுந்தர வைத்தியசாலை,**

187, செட்டியார் தெரு, கொழும்பு.





## மானம் விற்று வாழேன்

—மண்டூர் சோதி—

படைபதைக்கும் வெயில்வெள்ளம் பாயும்வேளை
 பள்ளிவிட்டு வரும்போது பாவியேநீ!
குடைபிடித்து ஒயிலாகக் கூந்தலாடக்
 குவிதடங்க ளதிரஇடை குனிநதுகூர்வேற்
படைநடத்திப் பவளவிதழ் பசுந்தேன்சிந்தப்
 பட்டத்து அரசியெனப் பச்சைக்கர்வ
நடைநடந்து வந்தாயே! நான்தானுன்றன்
 நட்பாள னென்பதையும் மறந்து அன்று.

"கொதிக்கின்ற வெயிலத்தான்! குடையுள்வந்து
 கூடுங்கள்" என்றொருசொல் கூறினாலுன்
மதிப்புக்கு இழுக்கேதும் வந்து போமா?
 மரியாதை தானென்ன மடிந்துபோமா?
கொதிப்புக்குக் குடைநல்காக் கோதையே!உன்
 கூட்டுறவில் எப்படிநான் குளிர்மைகாண்பேன்?
நிதிக்குத்தான் நீயென்னை நாடினாய்போபோ
 நிச்சயமாய்த் தன்மானம் விற்றுவாழேன்.

காதலெனிற் கரவாக உரிமைவிற்றுக்
 காசுபெறும் கயமையெனக் கருதினையோ?
பாதையென்று பாசத்தைப் பறக்கவிட்டுப்
 பரதவிக்க விட்டாயோ? பலபேர்முன்னே
தீதென்று அஞ்சியெனைத் தீயவிட்டுத்
 திண்டாட வைத்தாயே! திட்டமென்ன?
ஓதம்மா உணராமல் உறவுகொண்டு
 'உரிமையற்ற இனம்'போல உழலுகின்றேன்

———— | | | ————

## கண் திறப்பீர்!

—[கல்மல்துறை மறைதாஸன்]—

பணமமதை பிடித்துசிலர் ஆடுகின்றார்;
பதவி வெறி பிடித்துப்பலர் ஓடுகின்றார்;
தனது நிலை உயர்ந்தாலே போதுமென்று
தலைவர் பலர் கண்மூடி வாழுகின்றார்!
குணங்கெட்டுக் கொள்கைகளும் கெட்டு மக்கள்,
சீரழிந்து மாறுவதை யார் உணர்வார்?
மனஅமைதி அற்றுக்குடி மாறிப்போயின்,
மருந்துநீர் எங்கிருந்து கொண்டு சேர்வீர்?

காலம்மிக வேகமுடன் மாறுதிங்கே
காத்திருக்க நேரமில்லை கண்திறப்பீர்!
ஞாலம் உமதென்றுநீர் சொன்னற்போதா
ஞானம்மிகப் பெற்று பலதிட்டம் தாரீர்!
தோளில் மிக வலிமையுடன் எதையும் தாங்கும்,
தீரர்நீர், தூங்குவது வெட்கக்கேடு
கோழைகள் கண்ட நிலை இங்கேயில்லை
கொடுசெயல்கள் மாய்ந்தோட வழிசமைப்பீர்.

———— : : : ————

## சாடு ஒற்றைப்பாட்சியை!

—"மாயா"—

ஒற்றுமை குலைந்ததா உரிமைகள் ஒழிந்ததா?
நற்றமிழ் மறவர்தோள் நலமிழந்து விட்டதா?
கொற்றவர் குலத்தமிழ் கொடுங்கிவிட்டதா; அடா!
பெற்றதாய் அடிமையா! பேடியாதமிழ் மகன்?

விண்ணுயர்ந்த பெருமையும் வீரவேந்தர்கதைகளும்;
மண்ணுள் மக்கி விட்டதா? மானமற்றதா; தமிழ்க்
கண்ணை நீ இழந்தபின் கதைக்கவும் சிரிக்கவும்
எண்ணவும் எழுதவும் ஏதடா சுதந்திரம்?

சட்டமென்று சிங்களத் தளைபிணித்துன் அன்னையை
வெட்டவெளி வீதியில் விரட்டி விட்ட பின்னரும்
கட்டுண்டு கிடப்பையோ? காலமென்று மாறுமோ?
வெட்டடா தளைகளை வீரவாள் எடுத்து நீ!

தமிழினுக்கு உரிமையின் றேல் சாதல் வேண்டும்
 —[அனைவரும்
அமிழ்தினை நிகர்த்த சொல் அறிவினைத்
 தொடுத்துவில்
தமிழ் தமிழ் எனும் பறை சங்கொலிக்க வெற்றி சேர்;
தமிழா உன் பகை தடுக்க சாடு ஒற்றை யாட்சியை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இ. வி. சின்னையா,
அம்பாறை

கே: ஓர் சமஷ்டி ஆட்சியின் கீழ்தான் சிறுபான்மையினரின் பிரச்சினைகளைத் தீர்க்கலாம் என்ற தமிழரசுக் கட்சியின் கொள்கையை எதிர்க்கும் சில தமிழ் அரசியல் தலைவர்கள், சிறுபான்மையினரின் பிரச்சினை தீர்ப்பதற்கு வேறு வழி எடுத்து கூறாததின் மர்மம் என்ன?

ப: வேறு வழி தேடவேண்டிய தேவை அவர்களுக்குக் கிடையாது. அவர்களுக்குத் தெரிந்தது ஒரே ஒரு வழி தான், அதுதான் தமிழரசுக் கட்சிக்கொள்கையை எதிர்ப்பது. அதுவே அவர்களின் அரசியல். அந்த அரசியலுக்கே அவர்கள் தலைவர்கள்.

ஃ

க. சிவலிங்கம்,
யாழ்ப்பாணம்

கே: தொழிற் சங்கங்களின் 21 கோரிக்கைகளை அரசாங்கம் மறுப்பதின் காரணம் என்ன?

ப: முதலில் மறுத்துப் பிறகு கொடுப்பது இந்த அரசாங்கத்தின் பழக்கம். 21 கோரிக்கைகளை மறுப்பதும் அந்தப் பழக்க தோஷமாயிருக்கலாம்.

ஃ

சண்முகநாதன்,
அனலைதிவு

கே: அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் விலாசம் என்ன?

ப: கென்னடி, மே/பா எமதருமன், (வானவெளி மார்க்கம்) எமலோகம்.

ஃ

'தமிழரசு அபிமானி',
இராமநாதபுரம்.

கே: பத்திரிகைத்தணிக்கை காரணமாக எந்தப் பத்திரிகைக்கு நஷ்டம் உண்டாகிறது?

ப: எந்தப்பத்திரிகைக்கும் நஷ்டமில்லை. வாசகர்களுக்குத்தான் நஷ்டம்.

கே: கொழும்பு மாநகரத்துக்கு விஜயம் செய்த சீனப் பிரதமர் யாழ் நகருக்கு வராததின் காரணமென்ன?

ப: வந்தால் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடக்கலாம் என்று செய்திகள் கூறின. இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம்.

கே: காதலுக்கு சாதி, மதம் என்ற இடையூறுகளுண்டா?

ப: உண்டு பணத்தையும் அத்துடன் சேர்த்து கொள்ளலாம். "எந்தத் தெய்வீக"க் காதலையும் தகர்த்தெறியும் சக்தி இம் மூன்றுக்கும் உண்டு.

ஃ

ஏ. வி. சின்னையா, புசல்லாவ,

கே: நீண்ட நாட்களாக இலங்கை வானொலியில் தேசிய ஒலிபரப்பில் நேயர்கள் கேட்கும் பாட்டை மட்டும் ஒலிபரப்புகிறார்கள், விரும்பி கேட்கும் நேயர்களுடைய பெயரைச் சொல்வதில்லை. இதன் திருவிளையாடல் என்ன? இதற்கு நாங்கள் என்ன செய்ய வேண்டும்?

ப: நீங்கள் "நேயராக" மாற வேண்டும். "விரும்பிக் கேட்கும்" நேயர்களின் பெயர்களை ஒலிபரப்புவதாக அவர்கள் வாக்குறுதி அளிக்கவில்லையே.

ஃ

எஸ். வி. டயறி,
காரைநகர்

கே: நான் துறவியாக வாழ விரும்புகிறேன். அப்படியானால் முதலில் செய்ய வேண்டியது என்ன?

ப: ஆசையை ஒழியுங்கள். ஆனால் துறவியாக வாழும் ஆசையை ஒழித்து விடாதீர்.

ஃ

முகையதீன், மட்டக்களப்பு.

கே: சில பெண்கள் அன்பு காட்டி மோசம் செய்கின்றனர். இவர்கள் சமூகத்தில் வாழுவது முறையாகுமா?

ப: அன்பு காட்டி மோசம் செய்வதில் முதல் "பிரைஸ்" ஆண்களுக்கு உரியதே. அந்த ஆண்கள் இச் சமூகத்தில் வாழும் வரை அந்தப் பெண்களும் தாராளமாக வாழலாம்.

மு. கந்தையா,
பண்டத்தரிப்பு

கே: சமஷ்டிக் கட்சியினர் சத்தியாக்கிரகம் தொடங்கப் போகிறோம் என்றதும், பேச்சுவார்த்தை வட்ட மேசை மாநாடு என்றெல்லாம் பிரதமர் சொன்னாரே, இப்பொழுது மௌனம் சாதிப்பதன் நோக்கம் என்ன?

ப: நோக்கம் எதுவாயிருந்தாலும், நீண்டகாலம் மௌனம் சாதிக்க முடியாது. மக்களின் விழிப்பு மௌனத்தைக் கலைக்க உதவும்.

ஃ

மு. சச்சிதானந்தம்,
கண்டி

கே: கற்றதனாலாய பயன் என்ன—சிங்களத் திணிப்பால் வேலை கிடைக்காவிடின்?

ப: உத்தியோக மோகத்தை உதறித் தள்ளினால் கற்றதினால் பயனுண்டு. கைத்தொழில், கமத் தொழில், வர்த்தகம் முதலியவற்றில் ஈடுபட கற்றவருக்கு அதிக வாய்ப்பு உண்டு.

வி. எஸ் ஆனந்த்,
காரைநகர்

கே: ஓய்! குயுக்தியாரே, ஸ்ரீ லங்கா தமிழ்ப் பத்திரிகையை எடுக்கலாமா, விடலாமா?

ப: எந்தப் பத்திரிகையையும் பகிஷ்கரிக்குமாறு தற்போது நான் கூறமாட்டேன்.

ஃ

ஆரையூர் தம்பி,
ஆரையம்பதி

கே: ஜனநாயக முறைப்படி ஆட்சி நடைபெறும நமது இலங்கை நாட்டில் சிறுபான்மையோரின் உரிமை பாதிக்கப்படுவது ஏன்?

ப: அந்த ஜனநாயகம் ஒரு சாராருக்கு மறுக்கப்படுவதால் அவர்களின் உரிமைகள் பாதிக்கப்படுகின்றன ஜனநாயகம் பெரும்பான்மையோரையும் கைவிட்டுவிடும் போலல்லவா இப்பொழுது தெரிகிறது?

பொ. இருபைராசா,
கல்முனை-2

கே: எனது தாய்மொழி தமிழ், அதை விட்டுச் சிங்களத்தைப் படித்தால் வெளி நாடுகளுக்குச் சென்றால் பேசலாமா?

ப: பேசலாம், கையோடு ஒரு சிங்களவரையும் அழைத்துக் கொண்டு போனால்.

ஃ

அ அ. முத்தழகன்,
பிட்ராத்தமலை

கே: எம். ஜி. ராமச்சந்திரன் தி. மு. கவை விட்டு விலகியதாக என் நண்பர் கூறுகிறார். உண்மையா?

ப: எம். ஜி. ஆர். தி. மு. க. விலிருந்து விலகவில்லை என்றே செய்திகள் 'முறையிடுகின்றன'.

கே: மலைநாட்டுத் தமிழர்களின் எதிர்காலத்தைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?

ப: அவர்கள் சுமார் 12 இலட்சம் பேர். அவர்களின் ஆதரவாளர் சுமார் 25 இலட்சம் தமிழ் பேசும் மக்கள். இந்த பலத்தைப்பார்க்கும் போது, மலையக மக்கள் எதிர்காலத்தையிட்டு அஞ்ச வேண்டியதேயில்லை.

ஃ

எம். எம். மர்ஜினு,
கின்னியா

கே: இப்போது பீலிக்ஸின் அரசியல் நிலைமையெப்படி இருக்கிறது?

ப: பீலிக்சுக்கும், டி. பீக்கும் லடாய் என்று கேள்வி. இதில் ஒருவர் பிலிப்பையா உதவியை நாடியதும், மற்றவர் 'டபிள்' டாக்டரையா உதவியை நாடியுள்ளாராம், நல்ல 'கூட்டு' தான் போங்கள்!

திருவாளர்
**குயுக்தியார்**
மே/பா சுதந்திரன்
தபால் பெட்டி இல. 1183
கொழும்பு-12.

இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் வினாக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.


# 100 பரிசுகள் பெற்றே ஆக வேண்டும்

## புதிய சூப்பர் குயிங்க் "உங்கள் பேனாவுக்கான மை" போட்டி

### அனைவரும் பங்கு பற்றலாம்




இந்தப் படத்தில் காணப்படும் கைகள் யாவும் எல்லா பேனாக்களுக்கும் பாவிப்பதற்கு நேர்த்தியான சூப்பர் குயிங்க்கையே நோக்கிச் செல்கின்றன. ஆனால் ஏதோ ஒன்று அவர்கள் ஒவ்வொருவரையும் திகைப்படையச் செய்கிறது.

............இந்த கவர்ச்சிகரமான ஏழு நிறங்களில் எதை தெரிவு செய்வது?

நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம்

1. ஏழு நிறங்களையும் நன்றாக கவனியுங்கள். பின்னர் உங்களுக்குப் பிடித்தமான நிறங்களை வரிசைக் கிரமப்படி எழுதுங்கள்.
2. பிரவேச கூப்பனில் உங்களுக்குப் பிடித்தமான ஏழு நிறங்களையும் வரிசைக் கிரமப்படி எழுதுங்கள். உதாரணமாக, நிரந்தர கறுப்பு உங்களுக்குப் பிடித்தமானதாக இருந்தால் 1 என்ற எண்ணை நிரந்தரக் கறுப்புக் கெதிரே குறியுங்கள். இப்படியாக ஏழு எண்ணையும் குறிப்பிடுங்கள்,
3. ஒரு துண்டு கடுதாசியில் சூப்பர் குயிங்க் சம்பந்தமான கீழ்க் காணும் சுலோகத்தை 10க்கு மேற்படாத சொற்களை உபயோகித்து பூர்த்தி செய்யுங்கள். "சூப்பர் குயுங்க் மை மட்டுமே....................."
4. பூர்த்தி செய்யப்பட்ட பிரவேசக் கூப்பனையும் சுலோகத்தையும் 1964 ஜூலை 6ம் திகதிக்குப் பிந்தாமல் கீழ்க் காணும் விலாசத்துக்கு அனுப்பி வைக்கவும். சூப்பர் குயிங்க் "உங்கள் பேனாவுக்கான மை" த. பெட்டி. 1301, கொழும்பு.
5. உங்கள் பிரவேசக் கூப்பனுடன் சூப்பர் குயிங்க் பெட்டியின் மேலட்டையையும் சேர்த்து அனுப்புங்கள்.

கீழ்க் காணும் விதிகளை கவனமாக வாசியுங்கள்

அ. பிரவேசப் பத்திரங்கள் கீழ்க்காணும் கூப்பனில் அல்லது உங்கள் சூப்பர் குயிங்க் வியாபாரியிடம் கிடைக்கக் கூடிய பாரங்களில் பூர்த்தி செய்து அனுப்பப்பட வேண்டும். ஒருவர் எத்தனை கூப்பன் வேண்டுமென்றாலும் அனுப்பலாம், ஆனால் ஒவ்வொரு பிரவேசக் கூப்பனுடனும் ஒரு சூப்பர் குயிங்க் பெட்டியின் மேலட்டையை இணைத்து அனுப்ப வேண்டும்.

ஆ. எல்லா பிரவேசப் பத்திரகளும் பரிசீலனை செய்யப்படும். நடுவர்களின் அபிப்பிராயப்படி, வரிசைக் கிரமப்படியாக நிறங்களை தெரிவு செய்து சரியாக சுலோகத்தை பூர்த்தி செய்து அனுப்பிய முதல் 100 பேர்களுக்கும் ரூ. 20-00 க்கான வெகுமதி பத்திரம் வழங்கப்படும். அதை உங்கள் சூப்பர் குயிங்க் சில்லறை வியாபாரியிடம் கொடுத்து மாற்றிக் கொள்ளலாம். அல்லது கொழும்பு 11 பாங்ஷால் வீதியிலுள்ள மெஸர்ஸ் ராஜேந்திரம்ஸ் லிமிட்டெட்டில் கொடுத்து மாற்றிக் கொள்ளலாம். இந்த வெகுமதி சீட்டுகளை விட நீதிபதிகளின் அபிப்பிராயப்படி மிக நேர்த்தியான பிரவேசக் கூப்பன்களை அனுப்பிய முதல் மூன்று மனுதாரர்களுக்கும் பார்க்கர் VP பேனாவும் பென்சில் செட்டும் வழங்கப்படும்.

இ. பரிசு பெற்றவர்களுக்கு பரிசில்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். பரிசு கோரி யாரும் எழுதவேண்டியதில்லை. பரிசு பெற்றவர்களின் பூரா பட்டியலும் ராஜேந்திரம்ஸ் லிமிட்டெட்டில் அல்லது பிரபல சூப்பர் குயிங்க் வியாபாரியிடம் 1964 ஆகஸ்ட் 15ம் திகதிதொடக்கம் கிடைக்கும்.

ஈ. நீதிபதிகளின் தீர்ப்பே இறுதியானதும் சட்ட வரம்பிற்குட்பட்டதுமாகும். இந்தப் போட்டி சம்பந்தமாக எந்த வித கடிதத் தொடர்பும் விரும்பப்படமாட்டாது.

உ. போட்டி விதிகளுக்கு அமையாத மனுதார் போட்டியிலிருந்து விலக்கப்படக் கூடும்.

ஊ. போட்டிக்கு அனுப்பி வைக்கப்பட்ட சுலோகங்கள் அனைத்தும் மெஸர்ஸ் ராஜேந்திரம் லிமிட்டெட்டின் உடமையாகக் கணிக்கப்படும்.

எ. பிரவேசப் பத்திரங்கள் சேதமடைதல், காலம் தாழ்த்திக் கிடைத்தல், காணமற் போதல் ஆகியவற்றிற்கு எவ்வித பொறுப்பும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

ஏ. இந்தப் போட்டியில் மெஸர்ஸ் ராஜேந்திரம் லிமிட்டெட் அவர்களின் கூட்டுக் கம்பெனிகளில் கடமை புரிபவர்கள் அவர்களின் விளம்பரப் பிரதிநிதிகள் அல்லது இந்தப் போட்டியில் நேரடியாக தொடர்புடையவர்கள் அல்லாத இலங்கை வாசிகள் அனைவரும் பங்கு பற்றலாம்.

பிரவேசக் கூப்பன்

பெயர் ........................................................................

விலாசம் ........................................................................

........................................................................

நிரந்தர கறுப்பு........... நிரந்தர நீலம்...........

நிரந்தர நீலம்—கறுப்பு........... நிரந்தர சிவப்பு...........

நிரந்தர டர்குவாய்ஸ்........... நிரந்தர பச்சை...........

ரோயல் புளூ வாஷபல்...........

இந்தப் போட்டிக்கான விதிகளை வாசித்து, அவற்றிற்கமைந்து நடக்க நான் சம்மதிக்கிறேன்.

...............................
கையொப்பம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம்களின் தாய் மொழி சிங்களம் அல்ல

## சோனகர் சமூகத்தின் மொழி தமிழே!

இலங்கையிலுள்ள சோனகர் பெரும்பாலும், தமிழகத்திலிருந்து இலங்கைக்கு வந்தவர்கள் தான். சோனகர் சமூகத்தின் தலைவர்களுடைய தாய் மொழியும் தமிழ்தான். இப்படியிருக்கும் போது, சோனகர் சங்கம், போதனு மொழி சிங்களமாக இருக்க வேண்டுமென்று அரசாங்கத்துக்குச் சிபார்சு செய்தது, புரியாத புதிராகவேயிருக்கிறது. கிழக்கிலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு, இவர்களுக்கெல்லாம் ஒரு பாடம் படித்துக்கொடுத்திருக்கும் என நம்புகிறேன்.

முஸ்லிம் லீக் செனேட்டின் ஆதரவில் நடைபெற்ற கருத்தரங்கக் கூட்டத்தில், டாக்டர் இமாம் அவர்களிடம், முஸ்லிம்களின் தாய் மொழி இலங்கையில் எப்படித் தமிழாக வந்தது? எனக் கேட்கப்பட்ட போது, காயல் பட்டினத்திலிருந்து இலங்கைக்கு வந்த அரபிகள் வர்த்தகம் காரணமாகத் தமிழைப் படித்ததால் இலங்கை முஸ்லிம்களின் தாய் மொழி தமிழ் என்று கூறியுள்ளார். அவருடைய கூற்று சரியன்று.

பூர்வீக காலமுதல், அதாவது இலங்கையோடு வர்த்தகம் செய்தவர்கள், காயல் பட்டினம், கிழக்கரை, தொண்டி, நாகப்பட்டினம், தேவிபட்டினம், முதலிய தென்னகக் கடற்கரைப் பகுதியிலுள்ளவர்கள் தான். இங்கிருந்து குடியேறியவர்களே, இலங்கையில் சோனகர்கள் எனப்படுவர். இவர்களனைவரது தாய் மொழி தமிழ் தான்.

### அரபியர் தமிழ் கற்கவில்லை

டாக்டர் இமாம் கூறியதைப் போல், அரபிகள் தமிழ் படிக்கவும் இல்லை. படிக்கவும் மாட்டார்கள். காயல்பட்டினத்துக்கு வந்த அரபி யாத்திரீகரான இப்னு பதூதா காயல்பட்டினத்துக்கு வர்த்தகம் செய்ய வந்த அரபிகள் தமிழ் படித்ததாக அவர் நூலில் எழுதவேயில்லை.

இந்தியாவுடன் வர்த்தக காரணமாக வந்த இந்த அரபியர்கள் ஒரு மொழி பேசுகிறவர்கள் என, மகா மகோபாத்தியாய தாக்ஷிணாத்திய கலாநிதி டாக்டர் உ. வே. சுவாமிநாத ஐயர், "சீவக சிந்தாமணி மூலமும், நச்சினார்க்கினியர் உரையும்" என்ற நூலில் எழுதியுள்ளார்.

காயல் பட்டினத்திலிருந்து முதலில் சோனகர் இலங்கைக்கு வந்தார்கள் என்பது உண்மைதான். அரபித் தகப்பனுக்கும், தமிழ் தாய்க்கும் பிறந்த சோனகர்கள், காயல் பட்டினத்தில் வர்த்தகம் காரணமாக தங்கியிருந்தபடியால் தான், திருநெல்வேலி மாவட்டத்தில் 'சோனகன்விளை' என்ற பெயரால் ஓர் ஊர் இருக்கிறது போலும்!

**அல் ஹாஜ்**
**வ. மி. ஷம்சுதீன்**

### எச்சரிக்கை

"ஈழத்து இலக்கிய வளர்ச்சி" என்ற நூல் எழுதிய என் நண்பர் திரு கனக-செந்திநாதன் தனது நூலில் பின்வருமாறு முஸ்லிம்களுக்கு எச்சரிக்கை செய்கின்றார்.

"முஸ்லிம் அரசியல்வாதிகளுள் பெரும்பாலோர் தனிச் சிங்களச் சட்டத்தை ஆமோதித்து சிங்கள மொழியே ஆட்சி மொழியாக ஏற்றுள்ளார்கள். இதனால் முஸ்லிம் எழுத்தாளர்களின் எழுத்துக்களைப் பற்றிய அக்கறை வருங்காலச் சந்ததியினருக்கு ஏற்படாமலும், போகக் கூடும். இந் நிலையில தமிழர்களுடன், தமிழராக வாழும் கிழக்கிலங்கை வாழ் முஸ்லிம்கள் எச்சரிக்கையாக இருத்தல் வேண்டும்"

### மூதூர் முதலியின் கிராம விஜயம்

மூதூர் முதல் எம். பி. ஜனாப எம். ஈ. எச். முஹம்மதலி தனது இல்லத்திலிருந்து ஈருருளி மூலமாக மூதூருக்குச் சென்று நான்கு நாட்கள் தங்கி, சமீபத்தில் உடைந்த கல்லாறு அணைக்கட்டை நேரில சென்று பார்வையிட்டு, நீர்ப்பாசன அதிகாரிகளுடன் தொடர்பும் கொண்டு பின் கிளிவெட்டி, அல்லை, சேனையூர், தோப்பூர், கூனித்தீவு, கட்டைப்பறிச்சான், மூதூர், சம்பூர், பாலத்தடிச் சேனை ஆகிய கிராமங்களுக்கும் விஜயம் செய்து மக்களின் குறைகளை அறிந்தார்.

அவர் தனது இல்லத்திற்குத் திரும்பு முன் மூதூர் பட்டின சபையில் புதிய தலைவர் ஜனாப் எம். ஹபீப் முஹம்மது, மூதூர் முதல்வர் முஹம்மதலிக்கும், பல பிரமுகர்களுக்கும் தனது இல்லத்தில் சிறப்பான ஓர் இராப்போசன விருந்தளித்தார்.

### முஸ்லிம் அரசியல்வாதிகள்

இலங்கையில் ஒரு சில முஸ்லிம் அரசியல்வாதிகள் தங்கள் பதவிகளைக் காப்பாற்ற எண்ணி, சுயநலத்துடன், 'முஸ்லிம்களின் தாய் மொழி சிங்களம்' என்று பிரசாரம் செய்கின்றனர். இதில் எள்ளளவும் உண்மை இல்லை.

"அஸ்ராருல் ஆலம்" என்ற சிறந்த நூலை எழுதிய செத்தி லெப்பை அவர்கள், இலங்கை முஸ்லிம்களின் தாய்மொழி சிங்களமாக இருப்பின், ஏன் அவர் 1883-ல் தமிழில் "முஸ்லிம் நேசன்" என்ற பத்திரிகையை நடத்தினர்?

அறிவுச் சுடர் மேன்மை ஜனாப் பாஹூம் எல். எம். உதுமான் அவர்கள், ஏன் 1893-ல் தமிழில் "இஸ்லாம் மித்திரன்" என்ற பத்திரிகையை நடத்தினர், என்பதும் சிந்திக்கக்கூடிய தல்லவா?

# தலைநகரில் தமிழர் ஊர்வலம் நடத்துவதா

## சிங்களப் பத்திரிகை சீற்றம்

"இம்மாதம் 21-ந் திகதி கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தருகில் ஊர்வலமாகச் சென்ற தமிழர்கள் பிறரைப் பயமுறுத்தும் கோஷங்களைக் கோஷித்துக்கொண்டு சென்றதைப் பார்த்த எனக்கு நான் வசிப்பது பௌத்த சிறி லங்காவில்தானா, இல்லையேல தமிழ் தூத்துக்குடியிலா என்ற ஐயம் ஏற்பட்டது." இவ்வாறு சிறிசோம ஜயசிங்கா என்பவர் 30-3-1964ந் திகதி 'தவஸ' பத்திரிகையில் எழுதியுள்ள ஒரு கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். இக் கட்டுரை, தலையங்கம் வெளியாகியுள்ள பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

அக்கட்டுரையில் மேலும் எழுதியிருப்பதாவது:-

'ஊர்வலத்தில் சென்ற தமிழர்கள் கொஞ்சமும் அச்சமின்றி எழுதுவதற்கே கை கூசும் கீழ்த்தரமான போராட்டக் கோஷங்களைக் கோஷித்து பிரதம மந்திரியை நிந்தித்தனர்.

தொழிற் சங்கப் போராட்டம் நியாயமானதே. ஆனால் தொழிலாளர் பிரச்சினை என்ற போர்வையில் நாட்டின் பிரதம மந்திரியைத் தலை நகரிலேயே கள்ளத் தோணிகளைக்கொண்டு நிந்தனைசெய்வது முழு இனத்தையும் நிந்திப்பதாகும். தோட்டங்களிலிருந்து வெளி

அதனிலும் மோசமான ஏச்சுப் பேச்சுகளுடன் ஆட்ட பாட்டங்களுடன் அவர்கள் ஊர்வலத்தில் சென்றதைப் பார்க்கும்போது சிங்களமக்கள் எல்லாவித வேற்றுமைகளையும் களைந்துவிட்டு ஒன்றுகூடி நிற்கவேண்டிய அவசியத்தை நான் உணர்ந்தேன்.'

### தமிழர் காணிகளை விழுங்குகிறார்களாம்

மத்தியமாகாணத்தில் வீடு வாசலின்றியிருக்கும் தமிழர்களுக்குக்கண்டி அரண்மனைக்குச் சொந்தமான காணிகளையும் வீடுகளையும் பெற்றுக்கொடுக்கும் ஒரு புதிய தமி

## சிங்கள இதழ்களில்...

யேறி தத்தம் சொந்தத் தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்வதற்குக் கூடத் தயங்கும் தோட்டத் தமிழர்கள் கொழும்பு நகரத்திலேயே பிரதமரை இம்மாதிரி நிந்திக்கும் அளவுக்கு பலம் பெற்றிருப்பார்களாயின், அவர்களுக்கு வாக்குரிமையும் கிடைத்துவிட்டால் சிங்களவர்களான நாங்கள் எந்த உலகத்துக்குச் செல்ல முடியும்?

அன்று ஊர்வலத்தில் சென்ற தோட்டத் தமிழர்களுக்குத் தாங்கள் எதிர்பார்த்ததைவிட மகிழ்ச்சியடைய இடம் கிடைத்தது. அண்மையில் பண்டாரவளையில் இம்மாதிரியான ஓர் ஊர்வலம் நடைபெற்றபோது, மீண்டும் அவர்கள் அத்தகைய நடவடிக்கை எடுக்க முடியாத அளவுக்குச் சம்பவங்கள் நிகழ்ந்தன. ஆனால் நாட்டின் தலைநகரில்

ழர் ஸ்தாபனம் கம்பளைத் தொகுதியில் நிறுவப்பட்டிருப்பதாக ஒரு செய்தியைச் 'சவஸ' பத்திரிகை 30-3-64ந் திகதி பிரசுரித்துள்ளது.

கம்பளை, நாவலப்பிட்டி, அட்டன், தலவாக் கொல்லை, புஸ்ஸல்லா, ஆகிய பகுதிகளில் அரசாங்கத்துக்கும், கண்டி அரண்மனைக்கும் சொந்தமென்று கூறப்படும் நிலங்களை அவர்கள் பலாத்காரமாகக் கைப்பற்றி, வீடுகள் அமைத்துக் குடியிருக்கின்றனர்.

அவர்களின் தொழில், வர்த்தகம் ஆகியவைகளுக்குத் தேவைப்படும்நிதியைப் பிரஸ்தாப ஸ்தாபனம் கொடுத்துதவுகிறது.

கம்பளையில் 12 கடைகளைத்தவிர ஏனைய கடைகள் அனைத்தும் தமிழர்களுக்குச் சொந்தமாகிவிட்டன.

# அஞ்சல் திணைக்கள ஊழியருக்கு அ. எ. வி. சங்கம் வேண்டுகோள்

அஞ்சல் திணைக்களங்களில் கடமையாற்றும் தமிழ் பேசும் சகலதர ஊழியர்களும் இன்று வரை எத்தகைய சிங்களப் பரீட்சைக்கும் தோற்றுதிருந்தால், அவர்களைப் பற்றிய விபரத்தை அஞ்சல் எழுது வினைஞர் சங்கம் அனுப்பிவைக்கும்படி வேண்டியுள்ளது.

அஞ்சல் எழுது வினைஞர் சங்கப் பொதுச் செயலாளர் அண்மையில் 'சுதந்திரன்' மூலம் அஞ்சல் திணைக்கள சகலதர ஊழியர்களுக்கும் வேண்டுகோள் ஒன்று விடுத்துள்ளார்.

அந்த வேண்டுகோளின் விபரம் வருமாறு:

தபால் தந்திச் சேவையில், எந்தப் பகுதியிலாவது, எந்தச் சேவையிலாவது இதுவரை சிங்களத் தேர்வுப் பரீட்சை ஒன்றிலும் தோற்றாத தமிழ் பேசும ஊழியர்கள் அனைவரும் உடனே கீழ் கண்ட முகவரிக்கு தரும்படி பணிவுடன் வேண்டுகிறோம்.

கொள்கைக்காக நேர்மையுடன் போராடி வரும் அனைவரையும் ஒன்றுபடுத்தி ஆக்கப்பணியில் ஈடுபடுத்தவே இவ்விபரம் வேண்டப்படுகிறது.

தொடர்புகொள்ள வேண்டிய விலாசம்: செயலாளர், அஞ்சல் எழுதுவினைஞர் சங்கம், 679, காலி வீதி, கொழும்பு-3.

## மொழிகாக்கும் போரில் 278 பேர் சிறைவாசம்

தென்னாட்டில் இந்தி மொழி திணிக்கப்படுவதை எதிர்த்து திராவிட முன்னேற்றக் கழகம் ஓர் ஆண்டுத் திட்டம் ஒன்றின் கீழ் அறப்போராட்டம் நடாத்தி வருவது சுதந்திரன் வாசகர்கள் அறிந்ததே. கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 17-ம் திகதி முதல் தி. மு. க. தலைவர் அறிஞர் அண்ணா சிறையில் இருந்து வருகிறார்.

(8-ம் பக்கம் பார்க்க)




பாட்டாளி முதல்



பணக்காரன் வரை

எல்லோரும் புகைப்பது

கமலா பீடி

ஒரு முறை வாங்கி உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்

கமலா ஸ்டோர்ஸ்,

தந்தி தாமரை

நிர். 15, செட்டியார் தெரு, கொழும்பு-11

3597—6522

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஊவா பகுதியிலும் கழகம் முன்னேறுகிறது

## பதுளை மாவட்டத்தில் திரளும் பேராதரவு

## தோட்ட வாலிபர்களின் கரை கடந்த உற்சாகம்

மலையகத் தமிழ் மக்கள் வட—கிழக்கு மாகாணத் தமிழர்களுடன் ஒன்றுசேர்ந்து தோளோடு தோள் நின்று நிலையான போராட்டத்துக்குத் தயாராகி ஞர்கள் என்று பன்னூறு நண்பர்கள் கூறக்கேட்டு வியப்படைந்த எனக்குச் சென்ற கிழமை அதனை நேரில் கண்டறியும் வாய்ப்புக் கிடைத்தது.

நண்பர்கள் கூற்று ஆணித் தரமானதுதான் எனக் கூறு நின்ற வாய்ப்பினை மாணிக்க வள்ளித் தோட்டத் தொழிலாளர் கழகத் தேர்தற் கூட்டத்தின்மூலம் நான் அடைந்தேன்.

### இராஜரத்தினவின் கோட்டையில்...

அந்த இராஜரத்தினவின் கோட்டைக்குள்ளேயா உங்கள் கழகக் கூட்டம் என்று பலரும் வியப்புறலாம், ஆச்சரியப்படாதீர்கள். அதே இராஜரத்தினவின் கோட்டைக்குள்ளேயே ஆயிரமாயிரம் அங்கத்தவர்களைக் கொண்டு அதி வேகமாக வளருகின்றது நம் கழகம். வெளிமடையிலேயே வெற்றிக்கொடி நாட்டுமளவுக்கு வெகு வேகமாக வளர்கிறது நம் கழகம். தொழிலாளர் கழக மூவர்ணக் கொடி, தொங்க விடப்படாத தோட்டமே இனிமேல் இருக்கப் போவதில்லை.

சென்ற இடமெல்லாம் சிறப்பான வரவேற்பு. அட்டன், பொகவந்தலாவை, மஸ்கெலியா எங்கும் கண்கொள்ளா வரவேற்பைப் பெற்று நுவரெலியாவில் நெஞ்சகலா வரவேற்பைப் பெற்ற கழகத்தினர் தேர்ந்தெடுத்த இடம் ஊவா மாகாணம்.

கழகத்தின் மேல் மலையக மக்களின் உளவிருப்பை, உற்சாகத்தை, பெருகிவரும் ஆதரவை—இங்கு பார்த்த அளவிலேயே என்னால் கணிக்க முடிந்தது.

### எங்கும் மூவர்ணக் கொடி

வழி நெடுக அழகாகத் தோரணங்களினால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஏதோ வேறு விசேடமிருக்க வேண்டும் என்று எண்ணிய நான் நண்பர் கெங்கரெத்தினத்திடம் என்ன விசேடம்? என்று கேட்டேன்.

'இங்கேதான் எமது கூட்டம்'—என்றார் பக்கத்தில் வந்த நண்பர் சண்முகவேல்.

'பதுளை மாவட்டத்தில் கழகம் நடத்தும் முதற் கூட்டம்' என்று நண்பர் இராமையா கூறினார்.

எனக்கு உண்மையிலேயே ஆச்சரியமாகத்தான் இருந்தது.

பார்த்த இடமெல்லாம் மூவர்ணக் கழகக் கொடிகள் பட்டொளி வீசிப் பறந்து கொண்டிருந்தன. நெஞ்சார்ந்த மகிழ்ச்சியில் நினைவிழந்து சென்று கொண்டிருந்த என்னை மீண்டும் விழிப்படையச் செய்யும்படியான பல வித வரவேற்பு ஒலிகள்.

எங்கள் தலைவர் நாகநாதன்!

எங்கள் தந்தை செல்வநாயகம்!!

எங்கள் கழகம் தொழிலாளர் கழகம்!!!

உரிமை காக்க உயிரைக் கொடுப்போம்!!!!

காதைத் துளைக்கும்படியான இத்தனை பல வித நாதங்கள். எங்கள் வருகையைக் கண்ட, வாழத் துடிக்கும் வாலிபர்கள் வாழ்த்தொலி எழுப்பிக் கொண்டு எம்மை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள். நாம் ஊன்றிவிட்ட கழக விதை உடனே வளர்ந்துவிட வேண்டும் என்ற எண்ணங்

**இணுவையூர் கணேசன்**

கொண்டு போலும் வருண பகவானும் அந்தச் சமயத்தில் வருகை செய்தான். உணர்ச்சிவசப்பட்ட உள்ளங்களின் ஒப்பற்ற மருந்தாக நின்ற கழகக் கூட்டத்தை யாரால்தான் தடுக்க முடியும்?

### தாமதமேன்?

மேளவாத்தியம் ஒலிக்க மிகத் தொகையான மாலைக் கும்பலுடன் தலைவர்களின் பிரதிநிதிகளாகச் சென்ற நாங்கள் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டோம். எமக்கே இப்படியான வரவேற்பென்றால் தலைவர்களுக்கு......?

கூட்டம் தலைவர் இராமையா தலைமையில் ஆரம்பமாகியது. அட்டனில் கழகத்தைக் கட்டி வளர்த்த இராமையா வல்ல இவர்.

பதுளை மாவட்ட உறுப்பினர் இந்த இராமையா. அவர் கூறிய வார்த்தைகள் சில எம்மைச் சிந்திக்க வைத்தன.

'1939ம் ஆண்டு தொடக்கம் காங்கிரசால் ஏமாற்றப் பட்டோம். எங்கள் உரிமை பறிபோன பொழுது கேட்கவும் ஆளில்லையே என்று ஏங்கியிருந்த வேளையில் 1948ம் ஆண்டில் 'மலைநாட்டு மக்கள் பிரச்சினை' விடயத்தில் ஆரம்பமான கட்சி இதுவரையும் எம்மிடம் வரத்தாமதித்ததேன்?, நாம் எப்பொழுதும் உங்கள் தலைமையில் போராடத் தயாராயிருக்கிறோம்.'

எங்கள் பிரச்சினையை வைத்தே இந்தக் கட்சி தோன்றியதாக இருக்கையில் இத்தனை காலமும் ஏன் எம்மிடையே வராதிருந்தது என்று நண்பன் சின்னக்கறுப்பையா கேட்டிருந்தார். அந்த இளமைத் துடிப்புடைய வீர வாலிபரின் கேள்வி நியாயமானதாகவே பட்டது.

### நம்பினோம் ஏமாந்தோம்

நான் அவருக்கு விளக்கமாகப் பதில் அளித்தேன்.

'இப்பொழுது உங்கள் தலைவர்களான தொண்டமான் அஸீஸ் போன்றவர்களை நம்பித்தான் நாங்களும் ஏமாறியுள்ளோம். நாங்கள் கட்சி ஆரம்பித்த நாள் தொடக்கம் எங்களுடன் எந்நேரமும் ஒத்துழைக்கத் தாங்கள் தயார் என்று கூறிவந்தார்கள். அந்தத் தலைவர்கள் எங்கள் வட கிழக்குப் பகுதிகளுக்கே வந்து உறுதி தந்தார்கள். அதை நம்பி மலையக மக்கள் உண்மையாகவே இந்தத் தலைவர்களால் பாதுகாக்கப்படுவார்கள் என்றே நாமும் எண்ணி நடந்தோம். 1960ம் ஆண்டில் எங்களுக்கும் சுதந்திரக் கட்சியினருக்குமிடையில் பேச்சுவார்த்தை நடைபெற்ற போது மலைநாட்டு மக்களுக்கு நாங்கள் கேட்டபடி இரண்டு நியமன அங்கத்தவர் பதவிகள் தருகிறோம் என்று கூறினர். ஆனால் தொண்டமான் அஸீஸ் இருவரையும் நியமிக்க முடியாது. அவர்களில்லாமல் வேறு யாராவது இருவரை நியமிக்கலாம் என்பது அவர்களின் பிரதான அம்சம். தலைவர் செல்வநாயகம், தொண்டமான்

### மலை நாடு

அஸீஸ் இருவரையும் கலந்தாலோசித்து விட்டு தொண்டமானை நியமிக்கும்படி கூறினார். அப்படியாக நம்பிக்கையான தலைவரென நாம் எண்ணிப் பாராளுமன்றத்துக்கு அனுப்பியவர்கள், ஏற உதவிய ஏணியையே உதைக்கத் தொடங்கியுள்ளார்கள்.

### வெற்றி நிச்சயம்

1961ம் ஆண்டு நாங்கள் சத்தியாக்கிரகப் போராட்டத்தை வட கிழக்கு மாகாணத்தில் ஓரணியில் நின்று நடத்திய பொழுது இந்தத் தொண்டமான் அஸீஸ் போன்ற தலைவர்கள் மலைநாட்டு மக்களுடன் போர்க்களத்தில் குதிப்பார்கள் என்று எதிர்பார்த்திருந்த எங்களுக்குப் பெரிய ஏமாற்றமே காத்துக் கிடந்தது. அன்றே தந்தை செல்வா கூறியதுபோல் 'நாமே எமது இலட்சியத்துக்குப் போராட வேண்டும். மற்றவர்களை நம்பிப் பிரயோசனமில்லை. மலைநாட்டு மக்கள் மந்தைகளைப் போல் வளர்க்கப்படுகிறார்கள். அவர்களுக்கு உண்மையை விளக்கி உரிமைப் போருக்குத் தயாராக்க வேண்டும்' என்ற அந்த நோக்கமே இன்று நாம் உங்கள் மத்தியில் வரக் காரணமாகியது. நாம் காலந் தாழ்த்தி வந்திருந்தாலும் ஒற்றுமையுடன் உரிமைப் போரைத் தொடர்ந்தோமானால் வெற்றி நிச்சயமே.'

ஆனாலும் 1961ம் ஆண்டு வேலை நிறுத்தம் நடைபெற்றபொழுது அரசாங்கத்தைத் திணறவைத்த அந்தச் செயலில் ஒருசில மலைநாட்டு மக்கள் நேரடியாகக் கலந்து கொண்டதையும் நாம் குறிப்பிடத்தான் வேண்டும்.

இப்படியான சிங்கேறு வாலிபர்கள் இன்றும் ஆயிரமாயிரமாக உள்ளார்கள் என்பதற்கு அன்றைய கூட்டத்தில் பேச்சாள நண்பன் மதிநகையானுக்குச் செங்குருதித் திலகமிட்டு உறுதி கூறிய சின்னக்கறுப்பையா போன்ற காளையாகள் சாட்சியாவர்.

### வரவேற்பும் மூடு விழாவும்

1961ல் தொழிலாளர்கள் உரிமை பெறத் துடிக்கும் உற்சாகத்தைக் கண்ட தலைவர்கள் நாமும் போராட்டத்தில் இறங்குவோம் என்று ஆயத்தங்கள் செய்தார்கள். இரண்டு மாதங்கள் வட கிழக்கு மாகாணங்களில் அரசாங்க அலுவல்கள் ஸ்தம்பித்த நேரத்தில் ஒருநாள் வேலை நிறுத்தம் நடைபெற்றது. அரசாங்கத்தின் மிரட்டலுக்கு அடிபணித்த குபேரர்கள் வேலைநிறுத்தத்தைக் கைவிட்டனர். பலன் பூஜ்யமே, இதில் கண்ட உண்மையென்னவென்றால் 'சுயநலம் கொண்ட பிரபுக்கள் தலைமையில் நமக்கு விமோசனமில்லை' என்பதே. அத்துடன் இப்படியான தலைவர்கள் தலைமையில் இனிமேல் உரிமைப் போராட்டம் நடைபெறுவதால் பிரயோசனம் இல்லை என்று உணர்ந்த தொழிலாளர்கள் காங்கிரசுக்கு மூடுவிழா நடத்திக் கழகத்துக்கு வரவேற்பு விழாக்களை ஆரம்பித்து வைக்கிறார்கள், வாழ்க கழகமென வாழ்க தொழிலாளரென முழக்கமிடுகிறார்கள்,

உண்மையைஉற்றுநோக்கி உணர்ந்த தொழிலாளர்கள் உரிமையைப் பெறுவதற்காக உத்தமத் தலைவர்கள் தலைமையில் ஒன்று திரள்வதைக் கண்ட சௌமியமூர்த்திகள் முதலைக்கண்ணீர் வடிக்கத் தொடங்கியுள்ளார்கள். அத்துடன் கலைவிழாக்களும் கொண்டாடத் தொடங்கியுள்ளார்கள்.

இதுவரை காலமும் எத்தனை தொழிற்சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. அப்பொழுதெல்லாம் தமது ஆயுட்காலத் தலைமைப் பதவிக்கு ஆபத்தில்லையென்றிருந்தவர்கள் இப்போது ஆபத்துத் தலைக்குமேல் வந்துவிட்டதெனத் துடிக்கிறார்கள்.

உண்மையிலேயே மலையகத் தொழிலாளர்கள் இப்பொழுது உரிமைப்போராட்டத்துக்கு ஆயத்தமாகிவிட்டனர். நாங்கள் எதிர்பாராமலே அந்தக் கூட்டத்தில் முருகையா கறுப்பையா என்ற இளைஞர் இருவர் கத்தி கொண்டு கையைக் கீறி இரத்தமெடுத்து நண்பருக்குத் திலகமிட்டார்கள்.

'இனி உரிமை விடுதலைக்காக எந்தத் தியாகமும் செய்ய நீங்கள் தயாரா?' என்று நான் அவர்களைக் கேட்டேன். அவர்கள் அளித்த பதில் என்னை வியப்பிலாழ்த்தியது.

### ஒரே அணியில் நிற்போம்

'தொழிலாளியின் பிள்ளையாகப் பிறந்து தொழிலாளியாகவே வாழ முடியாது நாங்கள் கஷ்டப்படுவதிலும் பார்க்க, வருங்கால எமது சந்ததியினரின் விமோசனத்துக்கு உயிரையே கொடுக்கச் சித்தமாயிருக்கிறோம். தந்தை செல்வா எவ்வளவு முயற்சியெடுத்து எங்கள் முன்னாள் தலைவரைப் பாராளுமன்றத்துக்கு நியமித்தார். அதையே அவர் இன்று மறந்து தடுமாறுகின்றார். அவரைப்போல் எங்களையும் எண்ணிவிடாதீர்கள்' என்று உணர்ச்சிவசப்பட்டுக் கூறினார்கள்.

இவ்வார்த்தைகளைக் கேட்டுத் தொண்டமான் இன்னும் காங்கிரஸில் இருப்பாரா என்று யோசித்தேன்.

(11-ம் பக்கம் பார்க்க)

### மலையகக் கவிஞருக்கு பாராட்டு விழா

மலையகத்தில் கடந்த கால் நூற்றாண்டுகாலமாகப் பணி புரிந்து வரும் கவிஞரான திரு. பி. ஆர். பெரியசாமி அவர்களுக்கு ஓர் பாராட்டு விழா நடத்த ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இவ் விழாவை ஒரு கலைவிழாவாக நடாத்துவதற்கு திரு. செ. பத்மநாதனும், திரு. குறட் செல்வன் குமாரசாமியும் ஒழுங்குகள் செய்து வருகின்றனர். கொழும்பிலுள்ள நாற்பது நாடக மன்றங்கள் இணைந்து இவ்விழாவைச் சிறப்பிக்குமெனத் தெரிகிறது.


## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3.00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1964 ஏப்ரல் மாதம் 5-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு 12
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183

# நல்லெண்ணம், நேர்மை வேண்டும்

அரசாங்கத் தரப்பில் நல்லெண்ணமும், நேர்மையும் காட்டினாலன்றி மொழிப் பேச்சுவார்த்தைகளில் தமிழரசுக் கட்சி கலந்துகொள்ளமுடியாது என்று கட்சியின் செயற்குழு தீர்மானித்துள்ளது. இதே கருத்தைத் தமிழரசு வாலிப முன்னணியும் ஏற்கனவே வற்புறுத்தியிருந்தது.

ஒரு பிரச்சினையைப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்ப்பதாயின், அதில் ஈடுபடும் இருதரப்பினரிடையேயும் நேர்மை இருத்தல் வேண்டும். உள்ளொன்று வைத்து புறம்பொன்று பேசும் தந்திரத்தைக் கையாள்வது பித்தலாட்டமேயன்றி நேர்மையன்று. அரசியலில் நேர்மைவேண்டும்—பித்தலாட்டம் கூடாது.

தமிழரசுக் கட்சித் தலைமை என்றுமே நேர்மை தவறியதில்லை. தமிழரசுவாதிகள் சத்தியாக்கிரகிகள். 'சத்தியாக்கிரகிகள்' என்போர் எத்தகைய சோதனைகள் ஏற்படினும் நேர்மையின் வழி நிற்பவர்களாவர். கட்சியின் எல்லா நடவடிக்கைகளும்—போராட்டங்கள் உட்பட—நேர்மையை அடிப்படையாகக்கொண்டவைகளே. தமிழரசுத் தந்தையோ நேர்மையின் சின்னம் என்பதை எதிர்க்கட்சிகளும் ஏற்றுக்கொண்டுள்ளன.

பேச்சுவார்த்தைகளில் நேர்மை என்பது ஒரு சாராரிடம் இருந்தால்மட்டும் போதுமா? ஆட்சியாளரிடமும் அது வேண்டாமா? அவர்களிடம் நேர்மையின்றேல் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படமுடியாது. தந்திரம், உபாயம் என்பவைகளுக்கு மொழிப் பேச்சுவார்த்தைகளில் இடமில்லை. அப்படியான 'தந்திரோபாயங்களை' இதிலும் கையாளத் தொடங்கினால் ஆட்சியாளர் தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொள்வதில் வெற்றிபெறுவார்கள். அத்துடன் பிறரை ஏமாற்றும் முயற்சியிற் தோல்விகாண்பார்கள். நேர்மையின்றேல் இந்த விளைவுதான் இறுதியில் ஏற்படும்.

தமிழரசுக் கட்சி தங்கள் நல்லெண்ணத்தைக்காட்டவே நேரடி நடவடிக்கையை ஒத்திவைத்தது. அதனால் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கான சுமுகச் சூழ்நிலையும் தோன்றியது. இதனை ஒரு சாரார் மட்டும் செய்து பயனென்ன?

அரசாங்கத் தரப்பிலும் அத்தகைய நல்லெண்ணம் காட்டப்படவேண்டும். சூழ்நிலையைச் சுமுகமாக்கவும் அவர்கள் உதவவேண்டும். இல்லையேல் கட்சி காட்டிய நல்லெண்ணம் பாழ்பட்டு விடும். கட்சி தோற்றுவித்த சுமுகச் சூழ்நிலையும் மறைந்துவிடும்.

ஆட்சியாளர் நல்லெண்ணத்துக்குப் பதில் மனக்கசப்பைத்தான் வளர்க்கின்றனர். தமிழ்ப் பகுதிகளில் சிங்களத் திணிப்பின் வேகத்தைத் தளர்த்தக்கூட அவர்கள் முன்வரவில்லையே 30 இலட்சம் தமிழ்பேசும் மக்களும் இன்று சிங்கள அமுலில் சிக்குண்டு தவிக்கின்றனர். சிறுபான்மையோருக்கு மொழியுரிமை வழங்கப்படுவதற்கான ஓர் அறிகுறியைக்கூடக்காட்ட ஆட்சியாளர் தவறிவிட்டனர். அவர்களின் போக்கைப் பார்த்தால், சிங்களத்திணிப்பை விடாப்பிடியாகத் தொடர்ந்து தீவிரமாக அமுல் நடத்துவார்கள் என்றே தெரிகிறது.

தமிழ்பேசும் அரசாங்க ஊழியர்களைப் பழிவாங்கும் படலம் பெரும் வெறுப்பையும் அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளது. 'கட்டாய ஓய்வு' தமிழ்பேசும் ஊழியர்களை அரசாங்க சேவையிலிருந்து துரத்தியடிக்கும் கருவியாகப்பயன்படுத்தப் படுகிறது. அந்தக் கருவியைக் கொண்டு அரசாங்க ஊழியர்கள் இன்று பயமுறுத்தப்படுகின்றனர்.

அரசாங்க அலுவலகங்களிலும் தமிழ்பேசும் ஊழியர்கள்மீது 'ஒரு கெடுபிடிப் போரே' நடத்தப்படுகிறது. அவர்கள் பல்வேறு வகையில் இம்சிக்கப்படுகின்றனர். கண்மூடித்தனமான சிங்களத் திணிப்பால் அரசாங்க அலுவலகங்களில் சிங்கள மொழிவெறியர்களின் அட்டகாசம் எல்லை மீறியுள்ளது.

சிறுபான்மையோர் மீது ஆட்சியாளர் நல்லெண்ணத்தைக் காட்டவில்லை என்பதை இந்த நடவடிக்கைகள் நிரூபிக்கின்றன. நல்லெண்ணம் இல்லாத இடத்தில் எஞ்சியிருப்பது வெறுப்புத்தான்.

வாக்குறுதிகளை மீறுவதில் தற்போதைய ஆட்சியாளருக்கு நல்ல அனுபவமுண்டு. சென்ற தேர்தலின்போது அவர்கள் தமிழரசுக்கட்சிக்குக் கொடுத்த வாக்குறுதியை மீறினர். பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் கிடைத்ததும் இடதுசாரிகளுக்குக்கொடுத்த வாக்குறுதியையும் காற்றில் விட்டனர். பலம் குறைந்ததும் இன்று அவர்களின் உதவியை நாடி ஓடுகின்றனர்.

வாக்குறுதிகளிலும் தந்திரோபாயங்களிலும் இனி ஏமாறப் போகிறவர்கள் தமிழ்பேசும் மக்களை ஏமாற்றலாமெனத் திட்டமிட்டுச் செயலாற்றுகிறவர்களே தவிர, தமிழ்பேசும் மக்களல்ல.

நிலைமையை ஆராய்ந்த கட்சிச் செயற்குழு, கட்சி காட்டிய நல்லெண்ணத்தையும் தோற்றுவித்த சூழ்நிலையையும் பாழ்படுத்தும் நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்தும் நோக்கத்துடன் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

இத் தீர்மானத்தில் ஆட்சியாளருக்கு ஓர் எச்சரிக்கை தொனிக்கிறது 'தமிழ் பகுதிகளில் சிங்களத் திணிப்பையும், அரசாங்க ஊழியர்களைப் பழிவாங்கும் செயலையும் கைவிடாலன்றி மொழிப் பேச்சுவார்த்தைகளுக்கு நாங்கள் வரமாட்டோம்' என்பது ஆட்சியாளருக்குச் செயற்குழு விடுத்த எச்சரிக்கையாகும்.

இந்த எச்சரிக்கை அலட்சியம் செய்யப்படுமாயின், மொழிப்பிரச்சினையின் மீது பேச்சுவார்த்தைகள் நடக்கமுடியாது. தமிழரசுக் கட்சியின்றி தமிழ்மொழிபற்றி பேச்சுவார்த்தைகள் எப்படி நடத்த முடியும்?

ஆதலின், மொழிச்சிக்கலில் தீர்வுகாணும் நோக்கமிருந்தால், 'கட்டாய ஓய்வு' என்ற வஞ்சம் தீர்க்கும் செயலைக் கைவிட்டு, சிங்கள அமுலின் பெயரால்நடைபெறும் அநீதிகளையும் உடனடியாக நிறுத்திவைப்பது பிரதமரின் கடமையாகும். ஆட்சியாளரின் நல்லெண்ணத்தையும் நேர்மையையும் காட்ட அதுவே வழி. ஆத்திரமூட்டும்செயல்களால் சுமுகச் சூழ்நிலை ஏற்படாதென்பதை பிரதமர் உணர்வது நன்று.

[illegible] நேரடி நடவடிக்கையைக் கைவிடவில்லை—[illegible] மது என்பதை இவ்வேளையில் சுட்டிக்காட்டுவது தவருகாது.

[தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகத்தின் பிறந்த தினத்தை (31-3-64) யொட்டி எழுதியனுப்பப்பட்ட இக் கட்டுரையை இங்கு பிரசுரிக்கிறோம்.]

# தமிழ் மக்களின் எதிர்காலம் திரு. செல்வநாயகம் கையிலேயே தங்கியுள்ளது

'தமிழ் பேசும் மக்களின் எதிர்காலம் பெருமளவில் திரு. செல்வநாயகத்தின் கைகளிலேயே தங்கியுள்ளது. அவருக்கு இறைவன் நீண்ட ஆயுளைக் கொடுத்து இன்னும் பல வருடங்கள் தமிழ்பேசும் மக்களுக்கு அவரின் நற்சேவையை உதவுவாராக' இவ்வாறு தமிழரசுத்தந்தைஅவர்களின் பிறந்த தினத்தை யொட்டி வழக்கறிஞர் திரு. எஸ். சிவசுப்பிரமணியம் எழுதிய கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். திரு. சிவசுப்பிரமணியம் பழம் பெரும் அரசியல்வாதி. தமிழ் காங்கிரசின் ஆரம்பகாலத்தில் அதன் இணைச் செயலாளர்களில் ஒருவராகக் கடமையாற்றியவர்.

இன்று, இலங்கையில் அரசியற் தலைவர்களில் சிறந்த ஒருவரும், இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் தலைவருமானவருடைய 67 வது பிறந்த தினமாகும்.

இவர் இலங்கையின் முன்னணி வழக்கறிஞர்களில் ஒருவருமாவர். அது மாத்திரமல்ல, நற்குணத்துக்கும், பண்புக்கும் எமது காலத்தில் பெயர் பெற்ற சிறந்த பெரியார்களிலும் ஒருவராவார்.

இவருடைய இந்த நற்குணங்கள், சிறப்புக்கள், திறமைகள், சாதனைகள் யாவும், தமிழ் பேசும் மக்களின் மிகக்கஷ்டமான ஒரு கால கட்டத்தில், பணத்தையும், நேரத்தையும் செலவழித்து, வாழ்க்கையின் பல துறைகளிலும் தியாகம் செய்து, தமிழ் பேசும் மக்கள் நலனுக்காக தமது உடல் நலத்துக்கும், சொந்தப் பாதுகாப்புக்கும் இடையூறு ஏற்படும் வகையில் சேவை செய்து வருவதால, மேலும் சிறப்படைகின்றன.

திரு. செல்வநாயகத்தைப் பற்றி எழுதுவதற்கு, நான் ஓரளவுக்குத் தகுதி வாய்ந்தவனென்றே கருதுகிறேன். பள்ளிக்கூட நாட்களிலிருந்து எனக்கு அவரைத் தெரிவதுடன், சட்டத் தொழிற் துறையிலும் அவருடன் சேர்ந்து கடமையாற்றி வருபவன் நான்.

திரு. செல்வநாயகம், தமது உழைப்பு, நேர்மை, நடுநிலைமையான கணிப்பு, நீதியான மனப்பாங்கு, தமது வாடிக்கைக்காரரிடமும், சக சட்ட வல்லுனரிடமும் மதிப்பும் பணிவும் ஆகிய இக் குணங்களினாலேயே சட்டத் தொழிற் துறையில் முன்னுக்கு வந்தார்.

அவர் சட்டத் தொழிலை ஒரு உழைக்கும் கருவியாகப் பயன் படுத்தவில்லை. மக்களுக்குச் சேவை செய்ய உதவும் சாதனமாகவே எண்ணி உழைத்தார்; உழைக்கிறார். தமது வாடிக்கைக்காரரின் சக்திக்கு மீறிய பணம் அவர் தமது கட்டணமாகப் பெறுவதில்லை. இந்த உலகின் பணத்தை விட மேலானவை உண்டு. என்று அவர் சொல்வதுண்டு மனித நீதி என்று ஒன்று உண்டு என்பார்.

ஓர் வழக்குரைஞராக திரு. செல்வநாயகம் எல்லோராலும் விரும்பப் பட்டார். அவரது வாடிக்கைக்காரர் மாத்திரமல்லாது அவருடன் சேர்ந்தோ, எதிர்த்தோ

எஸ். சிவசுப்பிரமணியம்

வாதாடும் மற்றும் தமிழ், சிங்கள வழக்குரைஞர்களும் அவரை மிகவும் மதிக்கின்றனர்.



ஆனால், தமிழ் பேசும் மக்களின் நிலையையுணர்ந்து, அவர்களுக்குச் சேவை செய்வதற்கென அரசியலில் நுழைந்த திரு. செல்வநாயகம், சட்டத் தொழிற் துறையில் தமக்கு இருந்த சகல இனத்தவரின் மதிப்பையும், நட்புறவையும் கூடத்தியாகம் செய்யத் தயங்கவில்லை. அவர்களிடையே தமது அரசியல் பற்றித் தப்பபிப்பிராயம் ஏற்படினும் அவர் அதையிட்டுக் கவலைப்படவில்லை.

அவர் தமிழ்க்காங்கிரசில் சேர்ந்து, தமிழ் பேசும் மக்களின் நலனுக்காக உழைக்கத் தொடங்கிய காலத்தில், அவருக்குத் தொழில் முறையில் நல்ல புகழ் கிடைத்திருந்தது.

திரு. செல்வநாயகம் விரும்பியிருந்தால், அவர் ஒரு சுப்ரீம் கோர்ட் நீதிபதியாகவோ அல்லது பிரதம நீதிபதிகளில் ஒருவராகக் கூடவோ வந்திருக்க முடியுமென்ற எண்ணம் எமக்கு உணர்ச்சியளிக்க வேண்டும்; வருங்கால சந்ததியினர் நினைவுகூர வேண்டியதுமாகும். அவர் வேண்டுமென்றால், இந்நாட்டு மந்திரிகளில் ஒருவராகவும் வந்திருக்க முடியும்.

இத்தகைய பதவிகளை விரும்பாது, தாம் கடைப்பிடிக்கும் கொள்கைளுக்கு (சரியோ தப்போ) விசுவாசமான உறுதியுடன் உழைப்பது, தமிழ்ப் பண்பிற்கே புகழ் தருவதாகும்.

தமிழ் பேசும் மக்களின் எதிர் காலம் பெருமளவில் திரு. செல்வநாயகத்தின் கைகளிலேயே தங்கியுள்ளது. அவருக்கு இறைவன் நீண்ட ஆயுளைக் கொடுத்து, இன்னும் பல வருடங்கள் தமிழ் பேசும் மக்களுக்கு அவரின் நற்சேவையை உதவுவாராக.

## 6 மந்திரி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தனை ஆரவாரங்கள் நடந்து கொண்டிருக்கும் பொழுதும் பிரதமர் மௌனம் சாதிப்பதற்கு இதுவேகாரணமாகும் என்றும் அவ்வட்டாரங்களில் கருத்து நிலவுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களக் குடியேற்றத்தின் மர்மம்

## கிழக்கை அபகரிக்க திட்டமா?

**கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய பிரதேசங்களில் திட்டமிட்டு சிங்களக் குடியேற்றங்கள் நடைபெற்று வருவதாக நம்பப்படுகிறது. நகர்ப் புறங்களை அண்டியுள்ள மூடிக்குரிய பூமிகளை சட்டவிரோதமாகக் குடியேறுவதன் மூலம் அபகரித்து விட வந்தேறு குடிகளான வெளி மாகாணத்து சிங்களவர்கள் முயன்று வரு வருவதாகப் பல செய்திகள் கிடைத்துள்ளன.**

திருகோணமலையை அணித்துள்ளகன்னியா, நிலாவெளிப் பகுதிகளில் நூற்றுக்கும் அதிகமான ஏக்கர் காடுகளை அழித்து சட்ட விரோதமாக சிங்களவர்கள் குடியேறியிருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன. திருமலை எம். பி. திரு. எஸ். எம். மாணிக்கராசா அவர்களின் தலையீட்டினல் மாகாண அதிபரால் இக் குடியேற்றங்கள் தடுக்கப்பட்டிருக்கின்றன.

### மட்டக்களப்பில்

மட்டக்களப்பில் அகதிகள் என்ற போர்வையில் பல ஆண்டுகள் இருந்த சிங்களக் குடும்பங்கள் பல, ஊரணிக்கும் அமிர்தகளிக்கும் இடைப்பட்டிருந்த பிரதேசத்தில் குடியேற்றப் பட்டன. இக் குடியேற்றப் பிரதேசத்தை அண்டியுள்ள காடுகளை அழிக்கும் முயற்சியிலும், கள்ளத்தனமாகக் குடியேறும் முயற்சியிலும் பல வெளிமாகாணத்துச் சிங்களவர்கள் ஈடுபட்டிருந்ததாகவும். பொது மக்களின் கிளர்ச்சியால் தடைபட்டதாகவும் அறியக்கிடக்கிறது.

வெளி மாகாணச் சிங்களவர்களின் ஆக்கிரமிப்பைத் தடுக்க இருப்பிட நிலமற்ற தமிழர்கள் குடியேறும் முயற்சியில் ஈடுபட்டபோது அவர்களைச் சட்ட விரோதக் குடியேற்றக் காரர்கள் என்று பொலீசார் கைது செய்ததாகவும் தெரிகிறது.

மட்டக்களப்பு பிரதிநிதி திரு. செ. இராசதுரையும், செனட்டர் மு. மாணிக்கமும் சிங்களவர்களின் கள்ளக் குடியேற்றத்தை உடனடியாகத் தடை செய்ய வேண்டும் என்று காணி அமைச்சரைக் கேட்டுக் கொண்டிருப்பதாகவும் செய்திகள் கிடைத்துள்ளன.

நாட்டில் நடைபெற்ற வேலை நிறுத்தத்தை முறியடிப்பதற்காகப் பிறப்பிக்கப்பட்ட அவசர காலச் சட்டம் இன்று மட்டக்களப்பில் சிங்களமக்களைக் குடியேற்றுவதற்கும் பாவிக்கப்படுவதாகத் தெரிகிறது.

திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களில் நடை பெறுகிற இக் கள்ளக் குடியேற்றம் நன்கு திட்ட மிடப்பட்டு நடைபெற்றுவரும் ஓர் சதித்திட்டம் என்று ஒரு பிரமுகர் நமது நிருபரிடம் விமர்சித்தார். இத்தகைய குடியேற்றம் தொடர்ந்து நடைபெறுமானல், நிச்சயமாக இன்னும் சில ஆண்டுகளிலே கிழக்கு மாகாணத்தில் தமிழ் பேசும் மக்கள் எந்தவிதமான பாத்தியதையும் கொண்டாட முடியாதவர்களாகி விடக்கூடும். திருகோணமலையில் அண்மையில் நடைபெற்ற இடைத் தேர்தலின் போது ஒரு அபேட்சகர் வெளியிட்ட செய்தியும் உண்மையாகி விடும். இவ்வாறு அப்பிரமுகர் மேலும் கூறினர்.

# நல்லெண்ண நடவடிக்கை இல்லையெனில் பேச்சு வார்த்தைகளுக்கு இணக்கமில்லை

## தமிழரசு தீர்மானம்

**தமிழ் பேசும் மக்களின் உரிமைகளையிட்டு சகல கட்சிகளுடனும் கலந்து பேசி முடிவுக்குவர எண்ணியிருக்கும் அரசு, தனது நல்லெண்ணத்தை வெளிப்படுத்துவதானல், தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கு கட்டாய ஓய்வு வழங்குவதைநிறுத்தி, மொழிப் பிரச்சினை காரணமாக வெளியேறியவர்களை மீண்டும் வேலைக்குச் சேர்க்கவேண்டும். இவற்றைச் செய்யாவிட்டால் தமிழரசுக்கட்சி எந்தப் பேச்சுவார்த்தைகளுக்கும் இணங்காது.**

இவ்வாறு தமிழரசுக்கட்சி மத்திய செயற்குழு கடந்த வார இறுதியில் யாழ்ப்பாணத்தில்கூடித்தீர்மானித்தது.

தீர்மானத்தின் விபரம் வருமாறு:-

மொழிப்பிரச்சினை தீர்க்கப்பட்டு தமிழ் பேசும் மக்கள் சிங்கள மக்களுடன் சமஅந்தஸ்துபெற்று வாழும் நிலை ஏற்படுத்தப் படாவிட்டால், இந் நாட்டில் சமாதானம் நிலவுவதற்கோ, பொருளாதார நிலை உயர்வதற்கோ, சுபீட்சம் உண்டாவதற்கோ இடமில்லை.

தமிழ்பேசும் மக்களின் குறைகளையிட்டு அரசாங்கம் உணர்ந்து, ஏனைய கட்சித் தலைவர்களுடனும் கலந்து, மொழிப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முயன்று வருவதை தமிழரசுக்கட்சி வரவேற்கிறது. அதே வேளையில் தமிழ்பேசும் மக்களுக்கும், தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கும் நிர்வாகத் துறையில் அரசாங்கம் காட்டும் பாரபட்சம், குற்றச்சாட்டுகள் முதலிய தொல்லைகளை நோக்குமிடத்து, அரசாங்கத்தின் வாக்குறுதிகளையிட்டு, தமிழரசுக்கட்சிச் செயற்குழு சந்தேகிக்க இடமிருக்கிறது.

சிங்களத் திணிப்பினல் நூற்றுக்கணக்கான தமிழ் அரசாங்கஊழியர்கள் வேலையிலிருந்து துரத்தியடிக்கப் படுகின்றனர். கட்டாய ஓய்வின் மூலமாகவும் வெளியேற்றப்படுகின்றனர். எஞ்சி சேவையிலிருப்பவர்களோ மிகக் கீழ்த்தரமான, மனிதாபிமானமற்ற வகையில் துன்புறுத்தப்படுகின்றனர். அன்றாட நிர்வாகத்தில் உத்தியோக மொழியைத் திணிப்பதிலும் அரசாங்கம் எடுக்கும் முயற்சியை உன்னிப்பாகப் பார்க்குமிடத்து அரசாங்கம் தமிழ் பேசும் மக்களின் நல்லெண்ணத்தைச் சம்பாதிக்கும் என்று கருதமுடியாதிருக்கிறது.

அரசாங்கம் தனது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தி சமரசம் நிலைநாட்ட முற்படுவதானல், உடனடியாகத்தமிழ்ஊழியர்களுக்கு வழங்கப்படும் கட்டாய ஓய்வுப் பத்திரங்களை வழங்காமலும், மொழிப்பிரச்சினைகாரணமாக ஓய்வுபெற்றவர்களை மீண்டும் வேலைக்குச் சேர்க்கவும் வேண்டும். வடக்குக் கிழக்கு மாகாணங்களில் சிங்களத் திணிப்பைக்கைவிட வேண்டும்.

நல்லெண்ணத்துக்குரிய மேற்கூறப்பட்ட செயல்களை நடைமுறைக்குக் கொண்டு வர அரசு தயாரில்லையெனில் அரசுடன் எந்தவகையான பேச்சுவார்த்தையும் வைத்துக்கொள்ள முடியாது என்று தமிழரசுக்கட்சி மத்திய செயற்குழு தீர்மானித்தது.

# அரிசி மானிய வெட்டு....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அனைவரது ஆதரவேனும் கிடைக்குமா என்பதும் சந்தேகமே. இந்த நிலைமையில் வரவு செலவுத் திட்டத்தை நிறைவேற்றிக் கொள்ள இடதுசாரி ஐக்கிய முன்னணியின் ஆதரவைப் பெறுவதற்காக அரசாங்கம் முயற்சி செய்கிறது.

ஆனல் இந்த முயற்சி புதிய பிரச்சினைகளைத் தோற்றுவிக்குமென்பதில் ஐயமில்லை. இ. ஐ. முன்னணி சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் சேர்ந்து கூட்டு அரசாங்கம் அமைக்கும் பட்சத்தில் சுதந்திரக் கட்சியிலுள்ள 10—20எம். பிக்கள் அரசாங்கக் கட்சியிலிருந்து வெளியேறி எதிர்க் கட்சியில் சேர்ந்துவிடும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

அதே சமயத்தில் கூட்டுச் சேர்வதை எதிர்க்கும் சில இடதுசாரி எம். பிகள் இ. ஐ. முன்னணியிலிருந்து வெளியேறுவதுடன், கூட்டு அரசாங்கத்தையும் எதிர்க்கக் கூடும்.

ஆகவே அரசாங்கம் இப்பொழுது ஓர் அரசியற் சூதாட்டத்தில் ஈடுபட்டுள்ளது. வரவு செலவுத் திட்டம் இச் சூதாட்டத்தின் விளைவாக நிறைவேற்றப் படலாம். ஆனல் அந்தக் கூட்டு அரசாங்கம் ஒரு பிடிப்பற்ற கூட்டாகவே இருக்கும். கூட்டாட்சி இ ஐ. முன்னணியின் சொற்படி ஆட வேண்டிய நிலை ஏற்படலாம்.

இக் கூட்டு அரசாங்கம் எப்படிச் செயல்படப் போகிறதென்பது ஒரு வேடிக்கையாகவே இருக்கும். காலஞ்சென்ற திரு. பண்டாரநாயக்காவுடன் நீண்ட காலம் ஒத்துழைக்க முடியாத திரு. பிலிப் குணவர்தன எப்படி திருமதி பண்டாரநாயக்காவுடன் ஒத்துழைப்பாரென எதிர்பார்க்க முடியும்?

திருமதி பண்டாரநாயக்கா அலரிமாளிகையிலிருந்து விளையாடும் ஒரு சதுரங்க ஆட்டமாகவே முழுச் சம்பவங்களும் தோன்றுகின்றன. அவர் இந்த விளையாட்டில் திறமைசாலியாக இருக்கலாம்— ஆனல் அவரது திறமை மூளையால் கூட சமாளிக்க முடியாத ஒரு விளையாட்டு இது.

### தலவாக்கொல்லையில் தமிழரசுக் கிளை

மலையகத்தில் பல இடங்களிலும் தமிழரசுக்கட்சிக் கிளைகள் நிறுவப்பட்டு வருகின்றன. 5-4-64 ஞாயிறு காலை 10 மணிக்கு தலவாக்கொல்லையில்தமிழரசுக்கட்சி மாவட்டக் கிளை ஆரம்பமாகவிருக்கிறது. தலவாக்கொல்லை கொத்மலை வீதியிலுள்ள 47-ம் இலக்கக் கட்டிடத்தில் அமைந்த இலங்கைத் தொழிலாளர் கழகக் கட்டிடத்தில் மேற்படி கிளை ஆரம்பமாகிறது. இக்கட்டிடத்தில் தமிழரசுத் தலைவர்களும் கலந்துகொள்கிருர்கள் என்று தெரிகிறது.

## மொழிகாக்கும்......

(4 ம் பக்கத் தொடர்ச்சி)

இதுவரை தாய்மொழி காக்கும் அறப்போரில் ஈடுபட்டதற்காக, பாரத ஆட்சியாளர் சட்டத்தின் துணைகொண்டு வழங்கிய சிறைவாசப் பரிசை 278 கழகத் தோழர்கள் பெற்றிருக்கிருர்கள். தண்டனை வழங்குவதற்காக காவலில் வைக்கப்பட்டுள்ளவர்கள் இன்னும் பலர்.'

இதுவரை தண்டனை பெற்றவர்களில் குறிப்பிடக் கூடிய முன்னணித் தலைவர்களான திருவாளர்கள் கே. ஏ. மதியழகன், பேராசிரியர் க. அன்பழகன், இளமுருகு பொற்செல்வி, புலவர் பொன்னிவளவன் ஆகியோர் ஆறுமாத சிறைத் தண்டனை பெற்றுள்ளார்கள். சிறை வாசம் அனுபவிப்பவர்களில் பலர் சட்டசபை, பாராளுமன்ற உறுப்பினர்களாவர். அண்மையில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வெற்றிபெற்ற பலரும் சிறைச்சாலையில் உள்ளனர், வேறு சிலர் தண்டனை எதிர்பார்த்துள்ளனர்.

## கோணேசர் தரிசனத்துக்கு ஏற்பாடு

மூன்றரை நூற்ருண்டின் பின் விழா எடுத்துப் போற்றப்படும் குளக்கோட்டன் கோணேசர் சிவாலய உற்சவத்தில் கொழும்பு வாழ் இந்துக்களும் கலந்து சிவ தரிசனம் பெறுவதற்கு கொழும்பு விவேகாநந்த சபை ஒழுங்குகள் மேற் கொண்டுள்ளது.

இம்மாதம் 8-ம் திகதி காலை கொழும்பிலிருந்து விசேட தனி வசு ஒன்று புறப்பட்டு 10-ம் திகதி திரும்பி வருவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. இத்தனைக்கும் தங்குமிடம் உணவு வசதிகளுடன் கட்டணம் இருபத்தைத்து ரூபாவாகும்.

கோணேசர் தரிசனம் பெற விரும்பும் கொழும்பு வாழ் இந்துக்கள் கொழும்பு-13, 34, விவேகாநந்த மேட்டில் உள்ள சபை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளும் வண்ணம் வேண்டப்படுகின்றனர்.

## சிங்கள ............

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பது அத்தியாவசியமாகி விடும்.

அரசாங்கம் தமிழ் மொழிக்கு வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஓரளவு உரிமைகள் வழங்கினலும், வேலைகளை சுலபமாகச் செய்வதற்குத் தமிழ் கற்றிருந்தால்தான் நன்மையாகஇருக்கும். சிங்களவர்களே தமிழில் கடமைபார்க்கமுற்பட்டால் தமிழ் ஊழியர்களுக்கு கடமைபார்க்க வாய்ப்பிருக்காது.

பௌத்த பலவேகயாவின் கோரிக்கைக்கு இணங்க பல திணைக்களங்களில் சிங்கள ஊழியர்கள், அலுவலகம் முடிந்த பின்னர் தமிழ் படித்து வருகின்றனராம். [illegible] நடத்தப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

# வியாபாரத்திற்கழகு விளம்பரம் செய்தல்


**வவுனியாவில்**

சுதந்திரன் கிடைக்குமிடம்

**திரு. க. கனகநாயகம்,**

**13, கடை வீதி,**

**வவுனியா.**

தமிழ் பேசும் மக்கள் விரும்பிப் பாவிப்பது

**மாயா ஜோதி ஊது பத்திகளே**

- சுகந்த வாசனை
- நிலைத்து எரியும் தன்மை
- நியாயமான விலை
- நவீன முறையில் இறுக்கமாக அடைக்கப்பட்ட பாக்கெட்டுகளில் இப்பொழுது விற்பனையாகிறது.

உற்பத்தியாளர்கள்:-

ந. செல்லத்துரை, மாயஜோதி இன்டஸ்றீஸ்.
128/3, வாட்பிளேஸ், கொழும்பு—7.

**இன்றே எழுதுங்கள்**

எந்த விதமான மனக் கவலைகளோ, வாழ்க்கையில் நிறைவேற வேண்டிய காரியங்களோ இருப்பின் அவைகளை விபரமாக எழுதி அனுப்புங்கள். தெய்வ பலத்தினலும், மந்திர சக்தியினலும் உங்கள் காரியங்களை நிவர்த்தி செய்து தர முடியும். இரகசியங்கள் வெளியிடப்பட மாட்டாது.

கவர்மெண்ட் ரிஜிஸ்டர் மாந்திரீக வைத்தியர்

**பி. எம். திசாநாயக்க**

நாலு தேவாலய பிரதம தர்மகர்த்தா
அருத எண்ணெய் தலைமை காரியாலயம்
கம்பளை.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




இருள் வானைக் கீறிக் கொண்டு பாய்ந்த எரி வெள்ளி ஒன்று, ஒளி ஒடுங்கி, அவிகின்றது.

எவ்வளவு உண்மை; மறுக்கவே முடியாத பிரத்தியட்சமான உண்மை.

அடிவானில் ஒளி ஒடுங்கி, அவியத்தான் வேண்டுமா?

தூரத்தே பெருங்கட்டிடங்களின் மங்கற் கோடுகள், இருளூடே தெரிகின்றன, அவற்றிற்கும் அப்பால், சிவனொளிபாத மலையின் சிகரத்து மின் விளக்கு, நம்பிக்கை தரும் ஒளியாக மின்னுகின்றது.

நம்பிக்கை தரும் அச் சிறு ஒளியின் பின்னால், அதனோடு இணைந்து, மாபெரும் மலை; உண்மைப் பொருள் இருக்கிறது.

எரி வெள்ளி—?

முழுவதும் ஒளி தான்; ஆனால் அதன் பின்,-கண்ணைப் பறித்து மின்னி அவியும் போது அதன் பின்—

சூனியம் தான் மிச்சம்.

என் கொள்கைகள் எரி வெள்ளியா?

'சகல பிரச்சனைகளுக்கும் காரணம், அடிப்படைக் காரணம், என்ன தெரியுமா?'

அவன் என்னை நிமிர்ந்து பார்க்கின்றான். அவன் பார்வையில், என் பேச்சில் இருந்த படபடப்பு இல்லை. அமைதி உருகி வருகிறது.

'நீயே சொல்லு...!'

'அடிப்படைக் காரணம் பொருளாதாரக் குறைவு தான்......! ஒருவன் அளவிற்கு அதிகமாக உண்டு களிக்கும்போது, இன்னொருவன் ஒரு வேளை கஞ்சிக்கும் வழியில்லாமல் தவிக்கிறான்! ஒருவன் ஆடம்பரமாகக் காரிலே பவனி வரும்போது, இன்னொருவன் கொதிக்கும் வெயிலில், தார் சூடு பாதங்களைத் தீர்க்க, செருப்பிற்கே வழியின்றித் தடுமாறுகிறான்! ஒருவனுக்கு அளவுக்கு மதிகமான உடைகள்! இன்னொருவனுக்கு தன் மானத்தை மறைக்கவும் ஒரு முழத் துண்டில்லை! ஒருவனுக்கு அரண்மனை போன்ற வீடுகள் பல! இன்னொருவனுக்கு வாழ்வதற்குச் சிறு குடிசையுமில்லை! ஒருவன் பிறர் உழைப்பிலே வாழ்கிறான்! இன்னொருவன் உழைத்தும் வாழ வழியின்றித் தவிக்கிறான். இந்த நிலையேன்...? இந்த ஏற்றத்தாழ்வுகளேன்? மனிதர்களுக்குள் ஏற்ற விறக்கங்கள் ஏன்?"

உணர்ச்சி வசப்படுகின்றேன்.

எதிர்த்தரப்பில் அமைதி தான்.

'இந்த மனித பேதத்தை முற்றாக ஒழிக்க வேண்டும்! வர்க்க பேதமற்ற ஒரு சமூகத்தை அமைக்க வேணடும்! எல்லாருக்கும் சம சந்தர்ப்பம் எல்லாத்துறைகளிலும் அளிக்க வேண்டும்!'

ஆவேசத்தோடு தொடர்கிறேன்:

'அப்போதுதான் எல்லோருக்கும் உணவு கிடைக்கும்! வாழ வீடுகள் கிடைக்கும்!'

இருளினூடே என் கண்கள் துழாவுகின்றன. மலையுச்சியிலமைந்திருக்கும் என் விடுதியிலிருந்து பார்க்கும் போது, பல்கலைக் கழகக் கட்டிடங்கள் மங்கலாகத் தெரிகின்றன.

**'பொருளாதாரக் குறைவுதான் சகல பிரச்சினைகளுக்கும் காரணம் என்றான்' அவன். 'எல்லாருக்கும் உணவு கிடைத்தால், மொழி ஏன், இனம் ஏன், மதம் ஏன்?' என விவாதித்தான், அவன். கடைசியில்— உணவு மட்டுந்தான் வாழ்வல்ல; இன்னொன்றும் உண்டு என்று உணர நேர்ந்த போது........!**

மேடுகளும், பள்ளங்களும்!

வானில் இங்கொன்றும், அங்கொன்றுமாக நட்சத்திரப் பூக்கள்.

இரவுச் சாப்பாட்டிற்குரிய அழைப்பு மணி கிணுகிணுக்கின்றது.

அவன் எழவில்லை.

'வர்க்கபேதமற்ற ஒரு சமூகத்தை நான் எதிர்க்கிறேன் என்று நீ எண்ணுகிறாயா?'

நான் அவனைக் கண்ணிமைக்காது பார்க்கிறேன்.

அவன் மெதுவாக எழுந்து சென்று, பலகணிக் கதவைத் திறந்து விடுகின்றான். மென்காற்று இழைகிறது!

'மனிதர்களுக்குள் ஏற்றத்தாழ்வுகள் இருக்கக் கூடாது என்றுதான் நானும் விரும்புகின்றேன். எல்லாரும் மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என்றுதான் நானும் விரும்புகிறேன்! ஒருவன் ஒரு வேளை சோற்றிற்குத் தவிக்கும் போது, இன்னொருவன் மேலதிகமாக உண்டு சீரழிப்பதை நானும் வெறுக்கின்றேன்!...'

'அப்படியானால் நீயேன் மொழி, இனம் மதம் என்று திரிகிறாய்? மொழி வாழ வேண்டும் என்று ஏன் கூறிக் கொண்டு திரிகிறாய்?"

வானில் இருளின் கருமை அகன்று, தெளிவு தோன்றுகிறது. அங்கொன்றும் மிங்கொன்றுமாகத் தெரிந்த நட்சத்திர மலர்கள், எங்கும் இப்போது மலர்கின்றன.

"அவ்விடத்தில் தான் நீயும், நானும் வேறுபடுகின்றோம்! நீ உணவு மட்டுந்தான் வாழ்க்கை என்கிறாய்?'

'பின் வேறு என்ன?...?'

'உணவு மட்டுந்தான் வாழ்வல்ல! உணவு மட்டுந்தான் வாழ்வென்றால், மிருகங்களுக்கும், எங்களுக்கும் என்ன வித்தியாசம்?"

அவன் கேள்வியோடு நிறுத்தி விட்டு, என்னைப் பார்க்கின்றான்:

'உன் கொள்கைகள் உயர்ந்தவை! நல்லவை! ஆனால்-சிறிது யோசித்துப் பார், தெரிந்தோ, தெரியாமலோ மொழியையும், இனத்தையும், மதத்தையும் காட்டி, ஒரே நாட்டில் வாழ்கின்ற இன்னொரு சமூகத்தின் மேல் இன வெறியை ஊட்டிவிட்டு, பதவிக்கு வந்த சிங்கள அரசில், நாம் வர்க்க பேதமற்ற ஒரு சமூகத்தைக் காணப் பொதுவுடைமை பேசுவது சரியா? அப்படிப் பேசிக்கொண்டிருந்தால் நம்மினம், நம் மொழி......'

நான் வேகமாகக் குறுக்கிடுகின்றேன்:

'வர்க்க பேதமற்ற ஒரு சமூகத்தில், இனம், மொழி..?'

இப்போது அவன் குறுக்கிடுகின்றான்:

'இரு மொழி பேசும் மக்கள் சமூகம் வாழ்கின்ற ஒரு நாட்டில், ஒரு சமூகம் மட்டும் அதுவும் சிறுபான்மைச் சமூகம் மட்டும், வர்க்கபேதமற்ற சமூகத்தை அடையப் போராடும் போது, அச் சமூகத்தின் மொழி இனம் அழிந்து போய் விடும்! அது மட்டுமல்ல, எல்லா மக்களும், மொழி, இன, மத வேறுபாடின்றிப் போராடும் போதுதான் நீ கருதுகின்ற சமூகம் உருவாக முடியும்...!'

என் கண்களில் வெறுப்பு

'ஒரு மணிக்கு மேலாகிறது! இன்னும் படுக்காமல் வெளியே என்னத்தை அப்படிப் பார்த்துக் கொண்டு நிற்கின்றாய்?'

என் அறை நண்பன் கேட்கிறான்.

'நீ படுத்துக்கொள்! விளக்கை அணைத்து விட்டுப் படு!'

வெளியே இருள் தான். தூரத்தில் சிவனொளி பாத மலைச் சிகர மின் விளக்கு கண்ணைச் சிமிட்டுகிறது.

நாங்கள் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறோம். சிங்கள மாணவர்களும், தமிழ் மாணவர்களும் ஒன்றாக இருந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கின்றோம்.

'எவ்வளவு ஐக்கியம்!'

இன்னொரு மேசையிலிருந்து அவன், அந்தப் பிற்போக்குவாதி, சாப்பிட்டுக் கொண்டிருக்கின்றான்.

எனக்குப் பக்கத்தில் ஓரிடம் காலியாக இருக்கிறது.

அதில் ஒரு தமிழ் மாணவனை அழைத்து வந்து இருத்துகிறான், எங்களுக்கு உணவு பரிமாறுகிறவன்.

இந்தத் தமிழ்ப் பண்டிகளை இங்கேன் இருத்துகிறாய்?"— கேட்டவன், என் முன்னிருந்து சாப்பிட்டுக் கொண்டிருந்த ஒரு சிங்கள மாணவன் தான்; சிங்களத்தில் தான் கேட்டான்.

என் இதயமேன் துடிக்கிறது? இதயமே நீறற்று வரண்டு போனது போல... அடிவயிற்றில் பெரு நெருப்புப் படர்வது போல...

என்னால் அங்கிருக்க முடியவில்லை. மொழி விளங்காத நண்பர்கள் அமைதியாகச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

நான் எழுந்து சென்று, 'அவனு'க்கு முன் அமர்ந்து கொள்கின்றேன்.

அவன் விழிகளில் அதிசயம்; கேள்வி.

நான் வேதனையோடு விளக்குகின்றேன்.

அவன் சிரிக்கின்றான்.

'உணவு மட்டுந்தான் வாழ்க்கையா?'

நானென்ன பதில் கூறுவேன்?



'புரிந்து கொள்ளாதவன்!

"உணவு மட்டுந்தான் வாழ்க்கையா?"

அவன் திரும்பவும் கேட்கின்றான்.

என் தலை திடமாக அசைகிறது.

'உணவு கிடைத்தால் போதுமா?'

திரும்பவும் கேட்கின்றான்.

'உணவு மட்டுந்தான் வாழ்க்கை என்றாயே? அப்படியானால் இங்கே ஏன் எழுந்து வந்தாய்? தமிழ்ப் பண்டி என்று சொன்னானே, அவனுக்கு முன்னாலும் உணவு இருக்கிறது தானே?'

வேதனையோடு தலை குனிகிறேன்.

'அவன் அப்படிக் கூறிய போது நீ எதையோ ஒன்றை

(11-ம் பக்கம் பார்க்க)

உருவகக் கதை:




அவர்கள், தமிழ் வளர்ச்சிக்காக உழைக்கப் புறப்பட்டார்கள் ......அவர்கள் புலமை மிக்கவர்கள்; தமிழைப் பிழையறக் கற்றவர்கள். வித்துவச் செருக்குக் கொண்டவர்கள்; திருப்திக் கர்வம் மிக்கவர்கள். ஒரேயொரு எழுத்திற்காகத் தாங்கள் மனனஞ் செய்து வைத்திருந்த சூத்திரங்களையெல்லாம் அக்குவேறு ஆணி

எம். ஏ. ரஹ்மான்

வேறாக்கி, வருடக்கணக்காக வாது செய்தும் அலுக்காதவர்கள்...ஒருவர் வென்றார், மற்றவர் தோற்றார் என என்றுமே விவகாரம் முடிவுறாது. இருவரும் வெல்ல மாட்டார்கள்; தோற்கவும் மாட்டார்கள். அவர்களுடைய வித்துவச் சண்டையை இவர்களாற் புரிந்து கொள்ள முடியவில்லை.



இவர்களும் தமிழ் வளர்ச்சிக்காக உழைக்கப் புறப்பட்டார்கள். இவர்கள் முறையாகத் தமிழைக் கற்காதவர்கள்; தமிழைப் பிழையற எழுதப் பயிலாதவர்கள். அஞ்ஞான அகந்தை கொண்டவர்கள்; மூடகர்வம் மிக்கவர்கள். புரியாத தத்துவங்களை எல்லாம் புரிந்துகொண்டதாக நினைத்தார்கள். பத்திரிகைகளின் பக்கங்களை நிரப்புதலே எழுத்துப் பணியென எழுதத் தொடங்கினார்கள். இவர்களுடைய எழுத்துக்கள் அவர்களுக்கு விளங்கவில்லை.

அவர்கள் செய்யுள் வழக்கு என்றார்கள்.

இவர்கள் எங்கள் வழக்கு என்றார்கள்.

'மரபுநிலை திரிதல் செய்யுட்கில்லை' என்று அவர்கள் வாதிட்டார்கள்.

'பழையன கழிதலும் புதியன புகுதலும்...' என்று எங்கேயோ கேள்விப்பட்டதைச் சொல்லி இவர்களும் வாதிட்டார்கள்.

அவர்கள், 'பழையன கழித்தலும், புதியன புகுத்தலுமல்ல' என்று 'த்' என்ற ஓர் எழுத்தைச் சேர்த்து மீண்டும் வாதிட்டார்கள்.

இவர்கள், 'மக்கள் வழக்கே எங்கள் வழக்கு' என்று எதிர்வாதஞ் செய்தார்கள்

'வழக்கெனப் படுவ துயர்ந்தோர் மேற்றே...இழிசனர் வழக்கன்று' என்று அவர்கள் சொன்னார்கள்.

இவர்கள், 'இழிசனரா? எங்களைக் கீழ்ச்சாதி மக்கள் என்று திட்டுகிறார்களே......' என்று அழத் தொடங்கினார்கள்.

'இழிசனருக்கு அர்த்தம் அதுவன்று. இன்னென்ன நூல்களிலே இந்த அர்த்தத்திலேதான் வழங்கப்படுகின்றது' என்று விளக்க முன் வந்தார்கள்.

இவர்கள் அழுகிறார்கள்.

அவர்கள் விளக்குகிறார்கள்.

(11-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஸ்பீரமா'-சினிமாவில் புதுமை

## சுவிஸ் நிபுணர்கள் கண்டு பிடித்துள்ளனர்

**'ஸ்பீரமா' என்ற பெயரில் ஒரு புது விதமான சினிமாப்பட முறையினை சுவிஸ் நிபுணர்கள் கண்டு பிடித்துள்ளனர். அண்மையில் புதுமையானதெனக் கொள்ளப்பட்ட 'சர்க்கிளோரமா' வைவிட 'ஸ்பீரமா' நூதனமானதாம்.**

57 திரைப்படக் கருவிகளைக் கொண்ட, முள்ளம்பன்றி போன்ற ஒரே கருவி மூலம் சகல கோணங்களையும்.(ஆகாயம், பூமி உட்பட) ஸ்பீரமா படம் பிடித்துவிடுகிறது. இதைத் திரையிடுவதற்கு வட்ட வடிவமாக மொத்தம் 57 திரைகள் பொருத்தப்படுமாம.

81 அடி குறுக்களவும், 49 அடி உயரமும் கொண்ட கோள வடிவமாக அமைந்த ஒரு புது வகைத் தியேட்டரில்தான் இப்படத்தைத் திரையிட முடியுமாம். படம் பார்ப்பவர்களின் கால்களுக்குக்கீழேயும் தரையில் படம் தெரியுமாம். படம் பார்ப்பவர்களின் தலைக்கு மேலும் தம்மைச் சுற்றிலும் தங்கள் கால்களுக்குக் கீழும் 'ஸ்பீரமா' முறையில் தத்ரூபமாக காட்சிகளைத் திரையிடப்போகிறார்களாம்.

சுவிற்சர்லாந்தைச் சேர்ந்த லூசேன் நகரில் மே மாதத்தில் நடைபெறவிருக்கும் தேசிய பொருட்காட்சியில் 'ஸ்பீரமா' முறையில் திரைக் காட்சிகள் நடைபெற விருக்கின்றன.

## திருப்பாலை நாடக மன்ற ஆண்டு விழா

திருப்பாலை நாடகமன்றத்தின் முதலாண்டு நிறைவு விழாவும், இரண்டாவது நாடகமான 'தங்கத்தாய்' ஆரபபவிழாவும் 29-3-64ல் நடைபெற்றது. விழாவுக்கு திரு. இரா. பத்மநாதன் தலைமைதாங்கினார்.

'கலைக்குரல்' ஆசிரியர் திரு. ஆர். வரதராஜன், திரு. ஏ. இளஞ்செழியன், கவிஞர் பெரியசாமி, திரு. குறட்செல்வன் குமாரசாமி, திரு. சபா மஹ்மூத், திரு. ஓ. நாகூர், திரு. வெற்றிவேந்தன், திரு. ஏ. எஸ் ராஜா, திரு. முத்தழகன், திரு. எம். எஸ். அபுத் தாகிர், திரு. சீனிமுகம்மது, திரு. மவுர்தீன், திரு. ஜக்கரியா, திரு. எம். தாஜுதீன், திரு. டேலர், திரு. கெங்காதரன், செல்வி. சந்திரகலா, செல்வி. கிருஷ்ணகுமாரி, செல்வி. அமீனுபேகம் ஆகியோர் பேசினார்கள்.

சிற்றுண்டி விருந்தின் பின்னர் 'தங்கத்தாய்' நாடகத்திற்கான பாகங்கள்வழங்கப்பட்டன.

இந்நாடகத்தின் கதைவசனத்தை எழுதிய திரு. வெற்றி வேந்தன் பிரதம பாகத்தில் தோன்றுகிறார்.

## நாடகப் போட்டி

கொழும்பு இரசிகர்கள் இதுவரை நமக்கு அனுப்பியிருக்கும் விடைகளின் விபரத்தை மீண்டுமொருமுறை, அடுத்தவாரம் தருகிறோம்.

22-3-64 இதழில் வெளியிட்டிருந்தபடி தயாரிப்பாளர் வரிசையிலிருந்து திரு. எஸ். சண்முகநாதனின் பெயரை நீக்க வேண்டியதில்லை. எமக்குக் கிடைத்த தகவல்களின்படி திரு. எஸ். சண்முகநாதன் 1963 ஏப்ரல் மாதத்தில் 'பறந்ததே பைங்கிளி' என்ற நாடகத்தை தயாரித்து அளித்திருக்கிறார்.

'மண்ணும் மங்கையும்' என்ற நாடகம் 7-7-63-ல் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் அரங்கேற்றப்பட்டுள்ளது. உங்கள் விடைகளை இன்றே அனுப்பிவையுங்கள்.

**முடிவுத் திகதி 11-5-64**

குறிப்பு: ஒரு உறைக்குள் ஒருவர் எத்தனை விடைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம். ஆனால் போதிய முத்திரைகள் ஒட்ட வேண்டும்.

### நாடகப் போட்டி

1963-ம் ஆண்டில்..............................................
(ஊரின் பெயர்)

நடைபெற்ற தமிழ் நாடகங்களில்

சிறந்த நாடகம்..............................................

சிறந்த நடிகர்..............................................

சிறந்த நடிகை..............................................

சிறந்த நகைச்சுவையாளர்..............................................

சிறந்த கதாசிரியர்..............................................

சிறந்த இயக்குநர் (டைரக்டர்)..............................................

சிறந்த தயாரிப்பாளர்..............................................

சிறந்த வெளியீட்டாளர்..............................................

ஒப்பம்:..............................

முகவரி..............................

..............................

..............................

## கலைஞர் வருகையும் கட்டுப்பாடும்

சரோஜாதேவி இலங்கைக்கு வரவிருக்கிறார் என்று கடந்த 1-3-64 சுதந்திரனில் ஒரு செய்தி வெளியாகியிருந்தது நேயர்களுக்கு நினைவிருக்கலாம். சரோஜா தேவி மட்டுமல்ல, சிவாஜி கணேசனும் இலங்கைக்கு அதே சமயத்தில் வருவதற்கான ஆயத்தங்களைச் செய்து கொண்டிருந்தார் என்று நமது சென்னை நிருபர் தகவல் தந்திருக்கிறார். கடந்த வாரம் புரட்சி நடிகர் எம். ஜி. ஆர் இலங்கை வர ஏற்பாடுகள் செய்கிறார் என்றும் எமக்கு தமிழகத்திலிருந்து நம்பகமான செய்தி கிடைத்தது.

பிரபலம் வாய்ந்த நடிகர் நடிகைகள் இலங்கைக்கு வருவதற்குவேண்டிய ஆயத்தங்கள் செய்வது உண்மையே ஆனால் இலங்கை அரசு கடைப்பிடிக்கும் பிரயாணக் கட்டுப்பாடுகளினால்தான் எவரும் இலங்கைகு வரமுடியாது போகிறது. இலங்கை அரசு ஓரளவு கலைஞர்கள் வருகைக்காவது கட்டுப்பாடுகளை நீக்குமானால் இங்குள்ள கலா ரசிகர்களுக்கு வாய்ப்பாகவிருக்கும்.



அஞ்சி ஒடுங்கும் வஞ்சிக் கொடியினைக்கெஞ்சி அணைத்து விளையாடத் தவிக்கின்றான் காளை. தமிழகத்தில் வெற்றிப் பவனிவரும் நடேஷ் ஆர்ட் புரொடக்ஷன்ஸ் தயாரித்துள்ள 'என் கடமை'யில் எம். ஜி. ஆர்.-சரோஜாதேவி.

பட விமர்சனம்

## பெரிய இடத்துப் பெண்

தன் குடியைக் கெடுத்த கொடுமையாளனின் மகள் புனிதத்தைத் தந்திரமாக வசப்படுத்தி மணக்கிறான் முருகப்பன். தன் பழியைத் தீர்க்க வழி தேடும் போதே வேறு வகையில் பெரிய பண்ணையார் வஞ்சம் தீர்க்கப்படுகிறார். பெரிய இடமான பண்ணையார் வீட்டுக்கும் ஏழை விவசாயி முருகையன் வீட்டுக்கும் ஏற்படும் இந்த உறவுக்கு மூல காரணமாக அமைபவர் நாகேஷ்தான்.

குடுமிக் கட்டோடு வரும் முருகப்பனை (எம். ஜி. ஆர்) பார்ப்போரை மயங்கவைக்கும் பட்டணத்து மைனராக மாற்றவும், சபதம் நிறைவேறவும் பூரண ஒத்துழைப்பு கொடுப்பவர் நாகேஷ் தான்

பட்டிக்காட்டு வாலிபனை வெறுத்து, பகட்டிலே மயங்கி, பிறகு கல்லானாலும் கணவன் என்ற பண்புக்கேற்றபடி வாழ்க்கையை மாற்றி அமைக்கும் புனிதமாக சரோஜாதேவி திறமையுடன் நடிக்கிறார்.

பணத்தில் புரளும் பிரபுவாக எம். ஆர். ராதாவும், அதற்கேற்ற மகன் சபாபதியாக அசோகனும் சிறப்புடன் நடித்துள்ளனர். பழம் பெரும் நடிகை டி. ஆர். ராஜகுமாரி கங்கை அம்மாளாகத் தோன்றி சோக ரசத்துடன் நடித்திருக்கிறார்.

'கட்டோடு குழலாட-ஆட' என்ற கவிஞரின் பாடலை, தமிழிசையில் தோய்த்துக் கேட்போரைக் கிறங்க வைக்கவும், பார்ப்போரின் கண்களையும் கருத்தையும் ஆட வைக்கும் தயாரிப்பாளர்களின் திறமையை எத்தனை முறை பாராட்டினாலும் தகும்.

மயிர்க்கூச்செறியும் சிலம்பம் முதலிய சண்டைக் காட்சிகள் இரசிகர்களின் இரசனைக்கு இலக்சமாகப் படமாக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் வெற்றியீட்டிய இச்சுவைக் காவியம் ஈழத்திலும் இணையில்லாமல் பிரகாசிக்கும் என்பதில் ஐயமில்லை.

—நாதன்

## காந்திஜி பேரன் வருகை ரத்து

காந்தி அடிகளின் பேரனை ராஜ்மோகன் காந்தி தனது குழுவினருடன் இங்கு வருகிறார் என்றும் சுதந்திரன் இதழில் வெளியிட்டிருந்தோம் ஏப்ரல் மாத ஆரம்பத்திலிருந்து இக்குழுவினரின் இசை நாடகம் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. ஆனால் இலங்கையின் நாணயக் கட்டுப்பாடு போட்டுள்ள முட்டுக்கட்டையினால் இக்குழுவினரின் வருகை ரத்தாகி விட்டதாக அறிகிறோம்.

தேசியப் புனருத்தாரணத்தை அடிப்படையாகக் கொண்ட சமாதானத்தைப் போதிக்கும் நாடகங்கள் உலகின் பல பாகங்களிலும் லட்சக்கணக்கான மக்களின் பாராட்டைப் பெற்றுள்ளன. இலங்கை மக்களுக்கு இந்நாடகங்களைப் பார்க்கவும் காந்திஜியின் பேரனைக் காணவும் இருந்த வாய்ப்புத் தவறிவிட்டது.

## சிவசக்தியின் கலைவிழா

இயல், இசை, நடனம், நாடகம் ஆகிய துறைகளை உள்ளடக்கிய சிவசக்தி கலை அரங்கம் அளிக்கும்கலைவிழா மே மாதம் 8, 9, 10-ம் திகதிகளில் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும் என அமைப்பாளர் திரு. ஆர். ஜெகசோதி அறிவித்துள்ளார்.



(14) அறிமுகப்படுத்துகிறோம்

## திரு. ந. பரஞ்சோதி

1949ம் ஆண்டில் தும்பளை சிவப்பிரகாச வித்தியாசாலையில் 'கவி காளிதாஸ்' நாடகம், கரவெட்டி விநாயக வித்தியாசாலை மாணவர்களால் நடத்தப்பட்டது. காளிதாசனைத் தோன்றிய சிறுவனுக்கு புகழ் கிட்டியது. அன்று வேடம் புனைந்ததினால் கிடைத்த புகழைக்கொண்டே நடிப்புக்கலையில் சிறந்து வளருகிறார் திரு. ந. பரஞ்சோதி.

இளமையிலேயே நடனக் கலையில் ஒரு அலாதியான பிரியம் ஏற்பட்டமையினால் இயற்கையாகவே அங்கங்களை அசைத்து அபிநயம் பிடிக்கத் தாமாகவே கற்றுக்கொண்டார். சில நாடகமன்றங்கள் திரு. பரஞ்சோதிக்கு தாங்களே நடனம் பயிற்றினர் என்று உரிமை கொண்டாடுவதைக் கட்டோடு வெறுக்கிறார்.

நடனம் தெரிந்தமையினாலும், அங்கங்களின் தன்மையினாலும், பெரும்பாலும் திரு. பரஞ்சோதி நாடக மேடைகளில் பெண்வேடம் புனைந்தே தோன்றியிருக்கிறார். இளங்கோ மன்றத்தாரின் 'கலிங்கத்துக் கோட்டை', மற்றும் 'நவநாகரீகம்', 'அம்பிகாபதி' ஆகியநாடகங்களிலும் பெண் வேடமே புனைந்து சபையோரின் ஏகோபித்த பாராட்டுகளைப் பெற்றார்.

1962ம் ஆண்டுலவுனியா தொழில் நுட்பக் கல்லூரியினால் ஏற்பாடு செய்யப்பட்ட விவசாயக் கண்காட்சியின் போது 'நவநாகரீகம்' என்ற நாடகத்தில் நவநாகரீக மங்கையாகக் காட்சி தந்து இரசிகர்களை நன்கு ஏமாற்றிவிட்டார்.

தென் புலோலியூர் இளங்கோ முத்தமிழ் மன்றத்தினரால் வல்லிபுர ஆழ்வார் கோயில் தேர்த் திருவிழாவில்நடைபெற்ற 'கண்ணகி' நாடகத்தில் கண்ணகியாகத் தோன்றியிருக்கிறார். இவர் தோன்றிய பல நாடகங்கள் பல தடவைகள் திரும்பத் திரும்ப மேடையேற்றப்பட்டிருக்கின்றன. எண்ணற்றமேடைகளில் பார்ப்போர் வியக்கத்தக்கவகையில் நடனமாடியிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது கிராமம்:

## கல்வியங்காடு

எனது கிராமத்தின் பெயர் கல்வியங்காடு. எனது கிராமம் கோப்பாயிலுள்ளது. எனது கிராமத்தின் பாராளுமன்ற அங்கத்துவர் திரு. மு. பாலசுந்தரம் ஆவர்.

எனது கிராமம் யாழ்ப்பாணத்திலிருந்து மூன்று மைல் தொலைவில் உள்ளது. இங்கு ஆயிரக்கணக்கான மக்கள் வசிக்கின்றனர். அநேகம்பேர் கமத்தொழில் செய்கிருர்கள். சிலர் அரசாங்க உத்தியோகத்தில் கடமையாற்றுகிருர்கள்.

எனது கிராமத்தில் ஒரு வாசிகசாலையும், மூன்று ஆலயங்களும், ஒரு புகையிலைச் சங்கமும், அநேக கடைகளும், இரண்டு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் இருக்கின்றன.

எனது கிராமத்து வாசிகசாலையின் பெயர் ஞானபாஸ்கரோதய வாசிகசாலையாகும். இது ஆண்டாண்டு பல விழாக்களை நடாத்தி வருகிறது.

எனது கிராமம் சிறிய கிராமமாயினும், எல்லா வசதியும் உள்ளது.

## அறிஞர் அறிவுரை

தன்னை ஆளத் தெரிந்தவன் உலகையும் ஆளத் தெரிந்தவன்.

—கன்பூசியஸ்.

ஆன்ம உறுதியில்லாதவனுடைய உள்ளம் குமுறும் கடலுக்கொப்பாகும்.

—பாரதியார்.

வலிமையில்லாதவர், வாழ்வில் துன்பமே உறுவர்.

—மில்ட்டன்.

அறிவு, நம்மை உயர்ந்த இடத்திற்கு ஏற்றுவதற்காக அமைக்கப்பெற்ற வன்மையான சிறகு.

—ஷேக்ஸ்பியர்.

ஆசையை வென்ற மனிதனை உலகத்தார் வெல்ல முடியாது.

—புத்தர்.

உயர்ந்த உண்மை மலர்வது ஆழ்ந்த அன்பிலேயே.

—ஹீன்.

காற்றிலேறியவ் விண்ணையுஞ் சாடுவோம் காதற் பெண்கள் கடைக்கண் பணியிலே.

—பாரதியார்.

தொகுத்தவர்:
எம். பி. துரைராஜ்,
தெனியாய.

## எழுத்து மாறியுண்டு தெரியுமா?

1. யாப்பாழ்ணம்
2. அசாங்கரம்
3. சாகவாசிலே
4. நாழஈடு
5. சுழதரமி
6. கைஇலங்
7. போர்ப்அற
8. மதுஎமொழி
9. போட்டாரம்
10. டட்கூம்

(விடை: 5ம் கலத்தில்)




# இலங்கையும் ஜனநாயகமும்

— அருளழகன், ஏழாலை மேற்கு —

இலங்கை சுதந்திரமடைந்து இன்றுடன் 16 வருடங்களாகின்றன. எங்கு கேட்டாலும் இலங்கை ஒரு ஜனநாயக நாடு என்றே கூறுகிருர்கள். ஆ! ஏன் இந்த "ஜனநாயகம்" என்ற பெயருக்கே களங்க மேற்படுத்தி விட்டார்கள்? ஜனநாயக நாட்டிலே எல்லா மொழி பேசுவோர்க்கும் சம உரிமை உண்டு. சுதந்திரம் உண்டு. ஆனல் இலங்கையில் உள்ள தமிழ் பேசும் இனத்திற்கு ஏது சுதந்திரம்? அந்த இனம் இலங்கை அரசாங்கத்திடம் என்ன பாடுபடுகிறது, எத்தனை இன்னல்களை அரசாங்கம் தமிழ் பேசும் இனத்திற்குச் செய்துள்ளது! தமிழிற் கருமமாற்ற முடியாது. இந்தியாவை அறியாத தமிழ்ப் பிரஜைகட்கும் பிரஜா உரிமை இல்லை. இப்படியாகப் பல இன்னல்களை விளைக்கிறது.

இந்தியாவை எடுத்துப் பார்த்தால் ஒவ்வொரு மொழிக்கு ஒவ்வொரு இராச்சியம். இப்படியாக மற்றும் பல நாடுகளில் ஜனநாயகம் சிறந்து அமைகிறது. ஆனல் இலங்கையில் அப்படியில்லை. தமிழ் மொழி பேசும் இனத்தவர் ஒதுக்கப்படுகிருர்கள். இக் காரணத்தால் இலங்கைக்குத் தமிழ் பேசும் இனம் சூட்ட வேண்டிய பெயர் என்னவென்ருல் 'ஜனநாயக சர்வாதிகார நாடு'. சிங்கள மக்களை ஜனநாயகமாகவும் தமிழ் பேசும் இனத்தை சர்வாதிகாரமுமாகவும் அரசாங்கம் ஆள்வதால் இலங்கையை 'ஜனநாயக சர்வாதிகார நாடு' என்று அழைப்பது பொருத்தமாகும்.

இப் பெயரை எம் மனத்திலிருந்து அகற்றுவதற்குத் தமிழ் இளைஞர்களாகிய நாம் பாடுபட்டுப் பலனைப் பெற வேண்டும். ஒரு முறை தமிழ் இனத்தவர்கள் போராடிப் பின் தம் தோல்வியை ஒப்புக்கொண்டு விட்டார்கள் என்ற சொல் வெளிவராமல் மென்மேலும் போராடி எமது உரிமையைப் பெற வேண்டும். இந்தியாவிலே மகாத்மா காந்தி எத்தனை வருடமாகப் போராடி இறுதியிற் சுதந்திரத்தைப் பெற்ருர்?

'முயற்சி திருவினையாக்கும் முயற்றின்மை இன்மை புகுத்தி விடும்' என்ற வள்ளுவரின் வாக்கியத்திற்கிணங்க நாம் எமது போராட்டத்தைத் தொடர்ந்து நடாத்துவோமாக.

# நினைவும் மறதியும்

— "சிந்தனைச் செல்வி",
ஏழாலை மேற்கு —

இப்பூவுலகில் மானிட ஜென்மம் எடுத்த நாம் அதை எம் தவத்தின் பயன் என்றே எண்ணுகிரேம். ஆண்டவன் மானிடர்க்கு மாத்திரமே அளித்துள்ள அரும் பொருள் ஆரும் அறிவாகிய பகுத்தறிவு. நாம் எமது பகுத்தறிவை உபயோகித்து நல்லவற்றைத் தேர்ந்து தீயவற்றைக் களைந்து தூயவாழ்வை மேற்கொள்ளல் அவசியம்.

உள்ளம் என்பது எல்லா உயிர்களிடத்தும் உண்டு. பகுத்தறிவு அற்ற காரணத்தால் ஏனைய உயிர்கள் பகையைப் பழிவாங்கும் நினைவை உள்ளத்திற் தேக்குகின்றன. நாயின் உள்ளத்தில் நன்றியையும் பாம்பின் உள்ளத்தில் பழிவாங்கும் உணர்ச்சியையும் உண்டாக்குவது நினைவே. ஆனல் மனிதன் உள்ளத்தில் நினைவும், மறதியும் இரட்டைக் குழந்தைகளாய் வாழ வேண்டும். அப்போதுதான் நாம் பகுத்தறிவைப் பெற்றதன் பயனை முழுமையாக அடையலாம். குயிலின் கருமையை மறந்து அதன் இனிய கானத்தைச் செவிமடுத்து இன்பம் காண்பது போலவும், முட்களை விலக்கி மோகன ரோஜாவைக் கவர்ந்து சூடுவது போலவும், கடலின் அடித்தளத்தில் ஆழ்ந்திருக்கும் சிற்பிகளைக் கண்டெடுத்து முத்துக்களைச் சேகரிப்பது போலவும் நாம் நாளும் நம் வாழ்க்கைப் பாதையில் இடராக வரும் துன்பங்களையும் தீயவற்றையும் மறந்து இன்பத்தை நாடி நல்லவற்றைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

பிறர் செய்யும் நன்மை, பள்ளியில் கற்கும் பயனுள்ள கல்வி, ஆன்ருேரின் அறிவுரைகள், யாவும் நினைவிற் கொண்டால் நாம் நன்றியுடையோராயும், நல்ல அறிஞராயும், நாட்டின் பாதுகாவலராயும் வாழலாம். பிறர் செய்த தீங்கு, பழிவாங்கும் நினைவு, பகைமை ஆகியவற்றை மறந்து விட்டால் நாம் அன்பின் உருவமாக, பண்பின் உறைவிடமாக, நண்பர்களாக, அறிவாளிகளாக வாழலாம்.

"இன்னு செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல்" என்பது வள்ளுவ வாக்கு. ஒருவர் செய்த தீமையை மறந்தாற்ருனே அங்கே நல்ல நினைவைப் பொறித்து நன்மை செய்ய இயலும். இதிலே மறதிதான் முக்கிய அம்சமாகிறது. நமது மென்மையான உளத்தில் பகை என்ற கொடிய வியாதி புகுந்திடாது தடை செய்யும் மருந்து மறதி. தீமைகளை மறந்து தூய்மையான உள்ளத்துடனிருந்தால் அங்கே அன்பு, இரக்கம் ஆதியாம் நற்குணங்கள் செழித்தோங்கும், அன்பும் அறமும் நிலைத்து வாழும். இதயத்தில் பகை தோன்றவே மாட்டாது.

## வாழ்க்கை எப்படிப்பட்டது?

—கு. தியாகமணி,
மாவநெல்ல—

வாழ்க்கையெனும் கடலிலே குடும்பம் என்னும் படகில் ஏறி அன்பு, கட்டுப்பாடு, என்னும் இரு துடுப்புக்களைப் பிடித்து நேர்மைஎன்னும் சரியானபாதையில் ஓட்டிச் செல்லாமல்கண்மூடித்தனமாக ஓட்டினலோ குறுக்கு வழியிற் செல்ல நினைத்தாலோ, வஞ்சனைப் [illegible] படகு சிக்கித் திசை மாறி அலையவும், சில சமயம் கவிழ்ந்துவிடவும் நேரிடும்.

மலருக்கு மடல்:

# அன்னை தூய்மையானவள் அல்லவா?

அன்புள்ள மலருக்கு!

வணக்கம். தங்கையே, உன் தங்கத் தமிழ் மடல் என் தளிர்க்கரம் உரிய வேளையிற் தவழ்ந்தது. மட்டிலா மகிழ்ச்சி. நன்றி.

அண்ணுவின் கடிதங் கண்டு களி பேருவகையடைந்ததாக எழுதியிருந்தாய். முன்பெல்லாம் தொடர்ந்து எழுதி வந்த நான் இப்பொழுது "வளர்மதி"யை மறந்துவிட்டேன்; என்றெல்லாங் குறை பட்டிருந்தாய். கல்விக் கடமையும், புதிய சூழலும் என்னை அப்படிச் செய்துவிட்டன. மன்னித்துக்கொள். தமிழ்த் தாயை மறந்து எப்படியிருக்க முடியும். அவள் வாழ்வு தானே நம் வாழ்வு. தமிழார்வம் மிக்க நீ இப்படியெல்லாம் பொங்கியெழுவதில் வியப்பில்லையல்லவா! கடல் கடந்தும் கன்னித் தமிழன்னை கடிமணம் பரப்ப ஆசையோடு அன்னை மொழி பேணி வளர்க்கும் இரண்டு சகோதர, சகோதரிகளும் உன் ஆர்வத்தைப் படித்துவிட்டு எனக்கு எழுதியிருக்கிருர்கள். தொடர்பு கூடப் பேணு மூலங்கொண்டு விட்டார்கள்.

உனது இள உள்ளத்திலே இத்தனை விழிப்புணர்ச்சி இருக்கும் வரை தமிழினந் தாழ்ந்து விடாது. தலை குனிந்து அடிமைகளாக மாறி அன்னிய மொழியை அன்புக் கரம் நீட்டிப் பெற்றுப் பெரு வாழ்வு வாழாது. எமது கன்னித் தமிழ்த் தாய் களங்கமில்லாதவள். பழம் பெருமையுடையவள். பண்டையக் காலத்திலே பண்புடன் வாழ்ந்தவள். பாரினிலே அவள் புகழ் பாட—வீரத் தமிழினத்தின் வெற்றிக் கொடி சிங்களம், புட்பகம், சாவகம் இன்னும் எத்தனையோ இடங்களிலே எமது செந்தமிழன் கொடி பறந்தது. இவை யெல்லாம் பழம் பெருமைகளல்ல. வீரத்தின் வரலாறு. வெற்றியின் நுழைவாயில்!

நமது தமிழன்னை ஏராளமான செல்வங்களையுடையவள். பொருட் செல்வம் மட்டுமல்ல; இலக்கியச் செல்வம், கலைச் செல்வம், அருட் செல்வம், சொற் செல்வம், மற்றும் ஒரு இனத்துக்கு வேண்டிய அத்தனை செல்வங்களும் அவளகத்தே உண்டு. பல அறிஞர்களின் கருத்துப்படி தமிழ்ச் சொற் செல்வத்தை பல மொழிகளும் தம்மகத்தே கொண்டு விட்டதாக அறிய முடிகிறது. இந்த ஆராய்ச்சியில் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் மிகவும் சிறப்பாக ஈடுபட்டு ஆராய்ந்து தமது கருத்துக்களை அவ்வப்போது வெளியிடுகிருர்கள்.

வள்ளுவன் தெள்ளுதமிட் குறட் பாக்களைப் பார்! அதில் இல்லாதவை களே இல்லை.

மிகமிகத் தூய தனித் தமிழிற் படைக்கப்பட்டது திருக்குறள். இன்று எண்பத்தாறுக்கு மேற்பட்ட மொழிகளில் அது மொழி பெயர்க்கப்பட்டுவிட்டது.

மலர்! குறள் இத்தனை சிறப்புப் பெற்று ஓங்கக்காரணம் அதன் தனித்தன்மை! அதன் தூய தமிழொழுங்கு. அன்னையின் முக்கிய அணிகலன் திருக்குறள். அப்படியாயின் நமது அன்னையும் தூய்மையானவளல்லவா! அவளை நாம் களங்கப்படுத்தக் கூடாதல்லவா! அன்னியனும், ஆட்சித் திமிர் பிடித்தோரும் நமது அன்னை மொழியை இன்று வரை அழிக்க முடியாமைக்குக்காரணம் அவளது தூய்மை—தனித்தன்மை!

தங்கையே!......எல்லாந் தமிழில் எழுதி—பேசி எம் தமிழன்னையின் தூய்மையைக் காப்போம். அதுதான் மலர், நம் போன்ற தூய தமிழ்ச் செல்வ, செல்வியர்களின் தலையாய கடமை. மீண்டும் மறு மடலிற் சந்திப் போம்!

இவ்வண்ணம்,
ஈழத் தமிழண்ணன்,
'மதியமுதன்'.

# ஈழத்தின் ஞானவிளக்கு அணைந்துவிட்டது

(செல்வி. ஜெயராணி-சபாபதி பிள்ளை, வண்ணுந்தறை.)

"ஒழுக்கத்து நீத்தார் பெருமை
விழுப்பத்து வேண்டும் பணிவற் துணிபு"

என்னும் இக்குறளுக்கு யோகர் சுவாமியே எடுத்துக்காட்டு.

ஐயகோ! என்ன கொடுமை! என்ன கொடுரம்! ஈழத்தின் ஞான விளக்கு அணைந்துவிட்டதே! அந்தோ பரிதாபம்! தஞ்சம் என்று தன்னை நாடியவர்களுக்கு அபயம் அளிக்கும் தவஞானியின் திருக்கரம் சோர்ந்துவிட்டதே! இதுகாறும் ஈழத்தமிழ் மக்களின் தோன்ருத் துணையாய் விளங்கிய தெய்வீக புருஷர் இறைவனிடம் சென்றுவிட்டார்.

சுவாமிகள் 50 வருடங்களாக ஈழத்தின் ஞான விளக்காய் பிரகாசித்து வந்தார். இவர் இந்துசமயத்தவர்களுக்கு மட்டுமன்று தம்மை நாடிவந்த பிற சமயத்தவர்களுக்கும் போதகுசிரியராக விளங்கினர். இதிலிருந்து இவர்யாபேரையும் சமமாக நடத்தும் பெருந்தன்மை உடையவர் என்பது தெரிகிறது.

ஈழத்தில் மட்டுமன்றி மலாயா, இந்தியா போன்ற இடங்களிலும் இவருக்கு அடியார்கள் இருக்கிருர்கள். இவரது குரு பிரமஞானி ஸ்ரீ செல்லப்பா சுவாமிகள் ஆவார். யோகர் சுவாமிகள் குருபக்தியிற் சிறந்து விளங்கிருர். இவரின் 'நற்சிந்தனை' என்னும் நூலில் குருபக்தியை அறிய முடிகிறது. இவரின் பிரிவு சமய வாழ்வில் ஈடுசெய்ய முடியாத நஷ்டமாகும். இவரால் நிலைநாட்டப்பட்ட சிவதொண்டன் நிலயம் வளர்வதாக. அன்னரின் ஆத்மா சாந்தி அடைவதாக!

## விடை

1. யாழ்ப்பாணம்
2. அரசாங்கம்
3. வாசிகசாலை
4. ஈழநாடு
5. தமிழரசு
6. இலங்கை
7. அறப்போர்
8. எமது மொழி
9. போராட்டம்
10. கூட்டம்

தொகுத்தவர்: மு. கருணுநிதி,
ஏழாலை மேற்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

## முத்தமிழ்க் கலைமன்றம் மாவிட்டபுரம்

'பழம் பெருமை வாய்ந்த முத்தமிழ்க் கலையை முறையாகப் பேணுததால் அக்கலைகள் சிதைந்து மறைந்து போகும் நிலைக்கு வருகின்றன. கலை வளர்ச்சிக்குப் பாடுபட முனையும் போது, அங்கு வேற்றுமை யுணர்ச்சி எள்ளளவேனும் தலை காட்டக் கூடாது. ஈழ நாட்டில் இசைக் கலையிலும் சரி அல்லது எழுத்துக் கலையிலும் சரி ஒருவரை யொருவர் இகழ்வது, மாற்றான் பார்த்துக் கேலி செய்யுமளவிற்கு வளருகிறது. நாம் இன்றுள்ள சூழ் நிலையில் இவையனைத்திற்கும் முடிவு கட்டி முத்தமிழ்க் கலையைப் பரந்த நோக்கோடு எவரும் பயனடையக் கூடியதாக விருத்தியாக்கக் கங்கணம் கட்ட வேண்டும்'.

இவ்வாறு 16-2-64-ல் மாவிட்டபுரம் முத்தமிழ்க் கலை மன்றத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் தலைமைவகித்த திரு. சு. து. சண்முகநாதக் குருக்கள் பேசுகையிற் கூறினார்.

புதுவருட பதவியாளர்கள் தெரிவில் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:

காப்பாளர்:- இளைப்பாறிய மணியகாறன் திரு. எ. வேலுப்பிள்ளை, வலி வடக்கு காரியாதிகாரி திரு. ரி. முருகேசம்பிள்ளை, காங்கேசன் துறைப் பட்டினசபைத் தலைவர் திரு. மு. திடவீரசிங்கம், தெல்லிப்பளை, மயிலிட்டி கிராம சபைத் தலைவர்கள், திரு. த. செல்வரட்ணம், தி. க. இராசத்துரை ஆகியோர்.

தலைவர்: திரு. சு. து. சண்முகநாதக் குருக்கள், துணைத் தலைவர்: திரு. தி. கு. நகுலேஸ்வரக் குருக்கள், செயலாளர்: திரு. வே. குலசிவபாலன், பொருளாளர்: திரு. வே. குலசிங்கம், இந்து சமய விருத்தி சபை அதிபர்: திரு. தி. சபாரட்ணக் குருக்கள், இசைப் பிரிவு அதிபர்: இசைமணி வ. செல்லத்துரை, நாடகப் பிரிவு அதிபர்: திரு. ஏ. ரி. பொன்னுத்துரை பீ. ஏ., கிராமிய நடனப் பிரிவு அதிபர்: திரு. வ. வயிரவப்பிள்ளை.

திருவாளர்கள் ச. பாலகிருஸ்ணசர்மா, ஐ. பாலசுப்ரமண்யம், ச. சுந்தரமூர்த்திசர்மா, க. சுப்பையா, ச. சுப்ரமண்ய சர்மா, சி. சிவலிங்கம், த. இராசா ஆகியோர் ஆட்சிக் குழு உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

—

## இலங்கை அருந்ததியர் தமிழர் சங்கம்

இலங்கை அருந்ததியர் தமிழர் சங்க உறுப்பினர் கூட்டம் 15-3-64 ஞாயிறு காலை 10 மணியளவில் சங்கப் பணிமனையில் கிளைச்சங்கத் தலைவர்: திரு. க. மூ. காளை அவர்களது தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் கீழ்க்காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அருந்ததிய மக்களுக்கு நாளுக்கு நாள் மற்றவர்களால் பல இன்னல்கள் ஏற்பட்டு வருவதை நாடு நன்கறியும். நம் மக்களுக்கு ஏற்படும் இன்னல்களைத் தவிர்க்கவும், உரிமைகள் பெறவும் உடனடியாக எல்லா அருந்ததிய மக்களையும் அ. இ. அ. த. ச. அங்கத்தினராகும்படி இக் கூட்டம் கேட்டுக்கொள்வதோடு கொழும்பில் வட்டார ரீதியாகவும், வெளியூர்களில் நகர அடிப்படையிலும் இளைஞர்கள் முன்வந்து அ. இ. அ.த. சங்கக் கிளைகள் அமைத்து சமூகம் முன்னேறவும் தொழில் துறையில் ஏற்படும் தொல்லைகளைத் தவிர்க்கவும் இன இழிவை நீக்கவும் படித்த சமூக இளைஞர்கள் முன்வருமாறு இக்கூட்டம் அருந்ததிய தமிழ் மக்களைக் கேட்டுக் கொள்கிறது.

மருதானை மத்தியக் கல்லூரியில் பல ஆண்டுகளாக நடைபெற்றுவரும் . தமிழ் வகுப்புகளை கல்வி இலாகா மூடிவிடத் தீர்மானித்து, மாணவர்களைப் பல கல்லூரிகளுக்கு மாற்ற ஏற்பாடு செய்துவருவதைக்கண்டிப்பதோடு தொடர்ந்து அதே கல்லூரியில் தமிழ் வகுப்புகளை நடத்திவர வேண்டுமென்று கல்வி இலாகாவை இக் கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

மாணவர்களின் கல்விக்கு இடையூறு விளைவிப்பவர்கள் மீது அரசினர் கடும் நடவடிக்கை எடுக்கும்படி இக் கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

—

## திருவள்ளுவர் விழா

அரசினர் தமிழ்வித்தியாலய மண்டபத்தில் திரு. சி. க. அழகுதுரை தலைமை ஆசிரியர் அவர்கள் தலைமையில் திருவள்ளுவர் விழா 15-3-64 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. திரு. சா. சோமசுந்தரம் ஆசிரியர், செல்வி நா. பூரணம், திரு. எஸ். முத்துசாமி ஆசிரியர் ஆகியோர் திருவள்ளுவரைப் பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள்.

திருவள்ளுவரின் ஞாபகமாக நடைபெற்ற திருக்குறள் மனனப்போட்டியில் முதல் 10 அதிகாரங்களையும் மனனம் செய்து முதலாவது பரிசைத் தட்டிக்கொண்டார், அரசினர் தமிழ் வித்தியாலயத்தின் மாணவன் செல்வன் ஐ. செல்வராஜா 2-ம் பரிசை செல்வன் இரா. இலட்சுமணன் பெற்றார். பேச்சுப்போட்டி மேல்பிரிவு முதலாம் பரிசு செல்வன் இரா. இலட்சுமணன். இரண்டாம் பரிசு செல்வன் செ. பழனிவேல் மத்தியப்பிரிவு முதலாம் பரிசு செல்வி பெ. வீரம்மாள் இரண்டாம் பரிசு செல்வி வெ. இலட்சுமி. கீழ்ப்பிரிவு முதலாம் இடம் செல்வன் நா. சந்திரசேகரன். இரண்டாம் பரிசு செல்வன் இரா. சத்தியசீலன்.

பரிசில் பெற்றோர்களுக்கு செல்வி குணசேன ஆசிரியை அவர்கள் பரிசில்களை வழங்கினார். போட்டிகளுக்கு மத்தியஸ்தர்களாக செல்வி. நா. பூரணம், திரு. ஸ்டான்லிஸ், திரு. எஸ். முத்துசாமி ஆசிரியர்கள் கடமையாற்றினர். இறுதியில் மன்றச் செயலாளர் செ. பழணிவேல் நன்றி தெரிவித்தார்.

## சைக்கிள் வீரருக்கு வரவேற்பு

சைக்கிள் வீரர் இராமக்கிளிக்கு எட்டியாந்தோட்டை ஸ்ரீ கதிர் வேலாயுத சுவாமி கோவில் வாலிப வரவேற்பு கமிட்டியினரால் கோலாகலமான வரவேற்பளிக்கப்பட்டது. எட்டியாந்தோட்டை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவில் வாலிப வரவேற்பு கமிட்டித் தலைவர் திரு. முத்து தலைமையில் திரு. இராமக்கிளியின் வருகை ஆரம்பித்தது. நகர்புற வழி நெடுகிலும் திரு. இராமக்கிளிக்குப் பாராட்டுப்பத்திரங்களும் வீரத் திலகமும் மலர் மாலைகளும் புனைந்து, மகிழ்ச்சி ஆரவாரத்துடன் சைக்கிள் வீரரை மக்கள் வரவேற்றனர். கோவில் சன்னிதானவாயிலை அடைந்ததும் வரவேற்பு கமிட்டி காரியதரிசி திரு. தேவராஜர் மலர்மாலை சூடி. ஆராத்தி சைக்கிள் வீரரை வரவேற்றார். கோவில் சன்னிதானத்தில் திரு. ஏ. வி. பி. கோமஸ் பி. ஏ., இலங்கைத் தோட்டத் தொழிலாளர் யூனியன் பிரதிநிதி திரு. சுப்பையா உட்பட பலர் திரு. இராமக்கிளியைப் புகழ்ந்து பேசினர். அதன் பின்பு திரு. இராமக்கிளி விஜயத்தை யொட்டி விசேட அபிசேக ஆராதனை நடாத்தப்பட்டு, பிரபல வர்த்தகர் வீர பழனியப்பனால் கோவில் பிரசாதமும் பரிசும் வழங்கப்பட்டது. திரு. ஏ. வி. பி கோமஸ் அவர்களால் வாழ்த்து மடல் வாசித்தருளப்பட்டது. இறுதியாக அவருக்கு நகர்ப்புற மக்களால் அணிவித்தமலர் மாலைகளை ஏலத்தில் விற்கப்பட்டு அதில் சேர்ந்த பணம் கரா கொடை அரசினர் முஸ்லிம் பாடசாலைக் கட்டிட நிதிக்காக ஒதுக்கப்பட்டது. அதன் பின்பு திரு. இராமக்கிளி ஸ்ரீ கதிர் வேலாயுத சுவாமி கோவில் வாலிப வரவேற்பு கமிட்டியினரையும், மலையக மக்களையும் நகர்ப்புற மக்களையும் பாராட்டி பேசினார்.

—

## இலங்கை தி. மு. கழகம்

கொட்டகலை மாவட்டம் பளிங்குமலை 'இ. தி. மு. க. செயற்குழு' விரைவுக்கூட்டம் அட்டன் மாவட்டசெயலாளரும், கிளைச் செயலாளருமான தோழர்: இரா. ரெங்கையா அவர்கள் தலைமையில், கழகப்பணி மலையில் 18-3-64ம் நாள் புதன் மாலை 5-30 மணிக்கு நடாத்தப்பட்டது.

தலைவர்: இரா. ரெங்கையா அவர்கள் தமிழக சினிமா நடிகரும் தி. மு. க. முன்னணி வீரரும் தமிழக மேல் சபைஉறுப்பினருமான புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் தமிழக மேல்சபை உறுப்பினர் பதவியிலிருந்தும் 'தி. மு. க. பொதுக்குழு' உறுப்பினர் பதவியிலிருந்தும் இந்நேரத்தில் 'இராஜினமா' செய்து கொண்டது தமிழ் பெருங்குடி மக்களனைவருக்கும் மிக மிக வேதனையைத் தரக்கூடியது எனத் தமது தலைமையுரையில் தெரிவித்தார்.

தோழர்கள்: இ. ச. பாலசிங்கம், இ. செங்கமலை, ஏ. கண்ணையிரம் ஆகியோர்கள் உரை நிகழ்த்திய பின் தோழர்: இரா. ரெங்கையா அவர்கள் நன்றிநவிலலுடன் கூட்டம் முடிவுற்றது.

## ஆலம்புலம் ஸ்ரீ முருகன் சைவ மகா சபை

ஆலம்புலம் ஸ்ரீ முருகன் சைவமகாசபையின் ஆலோசனைக்கூட்டம் 19-3-64 அன்று மேற்படி சபையின் உபதலைவர் தலைமையில் ஆலம்புலம் ஸ்ரீ முருகமூர்த்தி கோவில்மண்டபத்தில் ஆரம்பமாகியது. சபைச் செயலாளரால் சென்ற கூட்ட அறிக்கை வாசிக்கப்பட்டுச் சபையோரால் அங்கீகரிக்கப்பட்டது.

ஆலம்புலம் ஸ்ரீ முருகமூர்த்தி கோவிலில் நடைபெற்றுக் கொண்டுவரும் மாதப்பூசைகள்யாவும்செவ்வனே நடைபெறுவதற்கு அக் கோவிலில் வரும் வருமானங்கள் போதாமையால் கிராம மக்களின் உதவியைச் சபை கோரவேண்டும் என ஆலோசனை கூறப்பட்டது. சென்ற சிவராத்திரியன்று வேலணை முத்துமாரியம்மனை ஆலம்புலம் ஸ்ரீ முருகமூர்த்தி கோவிலிற்குக் கொண்டுவந்து சிவன் ராத்திரி விழாவைச் சிறப்புற நடாத்திவைத்த திரு. பொ. தம்பு அவர்களையும் சபை பாராட்டியது. ஆலம்புலம் ஸ்ரீ முருகமூர்த்தி கோவில் வசந்த மண்டபம் கட்டின வகையில் ஏற்பட்ட வரவு செலவு விபரங்களையும் சபையார் பரிசிலனைசெய்ததுடன் கூட்டம் இனிது நிறைவேறிற்று.

—

## பாருவத்தை தோட்டப்பாடசாலை விளையாட்டுப் போட்டி

பீங்கந்தைத் தோட்ட பாருவத்தைப் பாடசாலை 4-வது ஆண்டு விளையாட்டுப் போட்டி 22-3-64 காலை 9. மணியளவில் தோட்டக் கண்டக்டர் திரு. கே. கிரிதாசா தலைமையில் நடைபெற்றது.

விளையாட்டுப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு திருமதி கே. கிரிதாசா பரிசில்களை வழங்கினார். மேற்பிரிவு சிறந்த வீரனாக செல்வன் த. தருமலிங்கமும், மத்திய பிரிவு சிறந்த வீரனாக செல்வன் ச. கதிரேசனும், கீழ் பிரிவு சிறந்த வீரனாக செல்வன் சு. தருமலிங்கமும் வெற்றிபெற்றனர். பெண்களுள் சிறந்தவீரமணிகளாக செல்வி இ. மனோன்மணியும், கு அன்னலெட்சுமியும் வெற்றி பெற்றனர்.

பாடசாலை ஆசிரியர் திரு. மா. சின்னத்துரையின் முயற்சியால் போட்டிகள் மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றன.

# கள்ளிப் புதர்க் காட்டில்....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இவற்றைவிட ஒரு உயர் நிலைப் பள்ளியும், இசைப் பள்ளியும் காரைக்குடியில் அமைக்கப்பட்டிருக்கின்றன. பெண்களுக்கு ஒரு கல்லூரியை வள்ளல் ஏற்படுத்த மறக்கவில்லை, ஆனல் அக்கல்லூரி ஆரம்பமாகிச் சில மாதங்களில் அவர் மறைந்து விட்டார். நிதி நிலை திருப்திகரமாக இல்லாததால் அக் கல்லூரி மூடப்பட்டது. மருத்துவக் கல்லூரி ஒன்று ஏற்படுத்த வேண்டும் என்ற அழகப்பரின் கனவு கனவாகவே இன்றும் இருக்கின்றது என்பதை வருத்தத்துடன் நினைவுகூர வேண்டியவராக இருக்கின்றோம்.

### தரிசு நிலமும் பரிசு நிலமாகும்

பல துறைக் கல்வியை வளர்க்கும் இக் கலைக்கூடங்களுக்கு ஓங்கி அடர்ந்த அழகிய கட்டடங்களையும், மண்டபங்களையும் கட்டித் தந்து காரைக்குடியை ஒரு அழகிய கலை நகரமாக்கி இருக்கின்றார் அழகப்பர். கல்வியை விரும்பிக் கற்பதற்குத் தகுந்த சூழலை அமைக்க எண்ணிப் பாலைவனத்தைச் சோலைவனமாக்குவது போல் பசுஞ் சோலைகள் ஆக்கித்தந்தார். மாணவருக்கான விடுதிகளும், ஆசிரியர்களுக்கான விடுகளும் மிக நேர்த்தியாக அமைந்திருக்கும் அழகினைக் காரைக்குடியில் காணலாம். 17 வருடங்களுக்கு முன்பு புல்லுக்கூட முளைக்க அஞ்சிய நிலத்தில் இயற்கையன்னையின் எழிலைப்பரப்பும்வகையில் மரம், செடிகள் பூத்துக் குலுங்குவதைக் காண்பவர், தமிழன் முயன்றால் தரிசு நிலமெல்லாம் பரிசு நிலமாகும் என்னும் கூற்று உண்மையானதாகும் என்பதை ஒப்புக் கொள்வர்

### விஞ்ஞான வளர்ச்சிக்கு...

இன்றும் காரைக்குடியில் மின்சார ரசாயன ஆராய்ச்சிச்சாலை ஒன்று அரசாங்கத்தால் நிறுவப்பட்டுத் தமிழகத்தில் சிறந்த விஞ்ஞான ஆராய்ச்சிநடைபெற வாய்ப்பளிக்கின்றதெனில், அதற்கும் அழகப்பரின் அயரா முயற்சியே காரணமாகும். அந்த நிலையத்தை நிறுவுவதற்காக முந்நூறு ஏக்கரா நிலமும், பதினைந்து லட்ச ரூபாயும் கொடுத்துதவ முன்வந்து, தமிழகம் விஞ்ஞானத் துறையில் பின்னடையாது காப்பாற்றிவிட்டார் அழகப்பர்.

டாக்டர் அழகப்பரின் பூதவுடல் 1954-ம் ஆண்டு மறைந்துவிட்டது, ஆனல் அவர் ஏற்றிவைத்த கலைவிளக்கு இன்றும் சுடர்விட்டுப் பிரகாசித்துக் கலைத்தலங்கள் அனைத்தையும் ஒளியுள்ளதாக்கி, ஆயிரமாயிரம் மாணவரின் அ[illegible]யென்னும் அக இருளைப் போக்கும் அரும் [illegible] விளங்கிவருகிறது.

# ஏதோ ஒன்று

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

இழந்தது போல உணரவில்லையா?'

உணர்கின்றேன்; உணர்கின்றேன்.

இருள் வானைக் கீறிட்டுக் கொண்டு பாய்ந்த எரி வெள்ளி ஒன்று, ஒளி ஒடுங்கி, அவிகின்றது.

தூரத்தே சிலனெளிபாத மலைச் சிகரத்து மின் விளக்கு மின்னுகின்றது.

(யாவும் கற்பனை)

— —

# உழைப்பு

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

இவர்களுக்கு விளங்கவில்லை.

இவர்களை அவர்களுக்குப் புரியவில்லை.

எதற்காக உழைக்கப் [illegible] அவர்களும் மறந்துவிட்டார்கள், இவர்களும் மறந்து விட்டார்கள்.

# ஊவா பகுதியிலும்..

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

25 ஆண்டுகாலக் காங்கிரஸ் ஆட்சியில்கண்ட பலன்ஒன்றுமில்லையென்பதையுணர்ந்து, 15 ஆண்டுகளில் பல உரிமைப் போர்களை நடத்திப் பயிற்றப்பட்ட தொண்டர்களையுடைய தமிழரசுக்கட்சியின் தலைமையில் தொழிலாளர்கள் திரண்டுகொண்டிருக்கிறார்கள்.

எங்கள் தலைவர்கள் தொடர்ந்து மலையக மக்களிடையே விழிப்பையேற்படுத்தி சிலகாலத்தைப் பிரயோசனம் படுத்தினல் வடகீழ் மாகாணத்தோடு மலையகமும் ஒரேயணியில் சேர்ந்து நிற்கும் நாள் அதிக தூரத்தில் இல்லை என்பதைக் கண்கூடாகக் கண்டுகொண்டேன்.


வளரட்டும் மலைமக்கள் வாழ்வு. தொழிலாளர் கழகக் கிளைகள் தோட்டங்கள் தோறும் திறக்கப்படவேண்டும் தொழிலாளர் துன்பம் நீங்கி எழிலான வாழ்வுகாண தொழிலாளர் கழகம்ஒன்றே தோனாகும் துணை. ஓங்குக ஒற்றுமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரவசமூட்டும் 8-வது வாரம்!

சென்ட்ரல் (மருதானை) ❋ ராணி (யாழ்ப்பாணம்)

மற்றும் என்டர்டெயின்மன்ட்ஸ் திரைகளில் ஓடிக் கொண்டு இருக்கிறது



சிவாஜி கணேசன், சரோஜாதேவி,
எம். ஆர். ராதா, பாலாஜி, ரங்காராவ்,
பத்மினி பிரியதர்சினி, கருணாநிதி,
முதலியோர் நடித்த
பிரசாத் மூவீஸ் அளிக்கும்

## இருவர் உள்ளம்

கலைஞர் கருணாநிதியின் பேனாவில் பிறந்த பண்பான
வசன நடை கொண்ட உயர்ந்த திரை ஓவியம்
'இருவர் உள்ளம்'

★ உள்ளத்தின் படப்பிடிப்பு
★ உணர்ச்சியின் இருப்பிடம்
★ கருத்துக் கருவூலம்
★ கற்பனைக்கு எல்லை

என்றெல்லாம் பார்த்தோர் புகழும் பாங்கான ஓவியம்

மூலக்கதை: டாக்டர் லட்சுமி திரைக் கதை வசனம்: கலைஞர் மு. கருணாநிதி இசையமைப்பு: கே. வி. மகாதேவன் டைரக்ஷன்: பிரசாத்



## புதுவருட விருந்து

கெபிட்டல் (கொட்டாஞ்சேனை)
மற்றும் திரைகளில்!


கல்யாண்குமார்,
தேவிகா, புஷ்பலதா,
ராஜ்ஸ்ரீ, சந்திரபாபு
நடித்த

மொடர்ன் தியேட்டர்ஸ்

## யாருக்குச் சொந்தம்?

4வது ஜனத்திரள் வாரம்!
செல்லமஹால் மற்றும் 7 திரைகளில்!

## வானம்பாடி



கிங்ஸ்லி (கொழும்பு)
பிளாசா (வெள்ளவத்தை)
நவா (கொம்பனித்தெரு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
வெம்பிளி (கண்டி)
விஜயா (மட்டக்களப்பு)
ஸ்ரீ கிருஷ்ணா (திருகோணமலை)
மொடேர்ன் (பதுளை)
விஜிதா (ஹட்டன்)
கல்யாணி (நாவலப்பிட்டி)

## 2வது ஜனத்திரள் வாரம்!

புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன்,
சரோஜாதேவி, டி. ஆர். ராஜகுமாரி,
எம். ஆர். ராதா, அசோகன், நாகேஷ்
மற்றும் பலர் நடித்த

## பெரிய இடத்துப் பெண்

பணம் படைத்த காரணத்தால் பாமரரை அடிமைகளாக எண்ணி ஆட்டிப் படைக்கும் பாவை ஒருத்தியின் கொட்டமடக்க வீறு கொண்டெழுகிறான் வீரனொருவன்—பஞ்சணை மெத்தையில் படுத்துறங்கும் அந்தப் பைங்கொடியை கடிமணம் செய்ய சபதம் கொள்கிறான் அக்காளை—அவன் கொண்ட முயற்சியை சுக்குநூறாக்க எழுந்திடும் ஆபத்துக்களும் கஷ்டங்களும் எத்தனை எத்தனையோ! கெட்டிமனம் படைத்த அந்தக் கட்டிளங்காளை தன் சபதத்தை நிறைவேற்றினானா? படமெடுத்தாடிய அந்தப் பாம்பை அவனால் பணிய வைக்க முடிந்ததா? இன்றே இந்த அற்புதச் சித்திரத்தை பார்த்து முடிவைத் தெரிந்து கொள்ளுங்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் [illegible] கொழும்பு, பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1964-ம் வருடம் ஏப்ரல் மாதம் 5ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.